Registered as a Newspaper பக்கங்கள் 6 விலை ரூபா 5-00

நல்லூர் கிளை நூலகம்

# ஈழநாதம்

The Eelanaatham மக்கள் தினசரி Peoples Daily

நாதம் 5 திருவள்ளுவர் ஆண்டு 2025 சித்திரை 31 (14.5.94) சனிக்கிழமை ஓசை 85

## மட்டு பிரதேச செயலர் பிரிவுகளின் எல்லை மாற்றம் குறித்து ஆராய்வு

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள ஆறு பிரதேச செயலாளர் பிரிவுகளின் எல்லைகளை மாற்றியமைப்பது தொடர்பாக ஆலோசனை நடத்தப்பட்டு வருகிறது கோறளைப்பற்று வடக்கு (ராகளை), கோறளைப்பற்று மேற்கு (ஓட்டமாவடி), ஏறவூர் நகர், மண்முனை வடக்கு, காத்தான்குடி, மண்முனைப்பற்று (ஆரைப்பற்றை) ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளின் எல்லைகளே மாற்றியமைக்கப்படுவது தொடர்பாக ஆராயப்பட்டுவருகிறது. கிழக்கு மாகாணத்தில் சிங்களவர் ஆதிக்கத்தை விஸ்தரிப்பதற்காக இவ்வாறு காலத்துக்கு காலம் எல்லைகள் மாற்றியமைக்கப் படுவது உண்டு என சுட்டிக் காட்டப்படுகிறது.

## விசேட கலந்துரையாடல்

யாழ். மாவட்டத்திற்கு உட்பட்ட வர்த்தகர் சங்கங்கள், கூட்டுறவுச் சங்க பணிப்பாளர் சபை உறுப்பினர்கள் சிக்கனக் கூட்டுறவுச் சங்க இயக்குநர்கள், சன சமுக நிலைய சமாஜ நிர்வாகத்தினர் ஆகியோருக்கான விசேட

(6 ஆம் பக்கம் பார்க்க

## வயோதிபரும் மரணம்

இணுவிலில் தியேட்டர் பிளாற் இடிந்து விழுந்து படுகாயமடைந்து இரண்டு காலும் துண்டிக்கப்பட்ட நிலையில் யாழ் போதனா மருத்துவ மனையில் சிகிச்சை பெற்று வந்த செல்வரட்ணம்

(6ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ் அகதிகள் விவகாரம்

# கனடா சட்டமா அதிபர் மீது சிறிலங்கா அரசு பாய்ச்சல்

## எதிராக செயற்படுவதாககுற்றச்சாட்டு

(கொழும்பு)

**அகதிகள் அந்தஸ்த்துக்கோரும் இலங்கையர்கள் தொடர்பாக சிறிலங்கா அரசுக்கு எதிராக கனடாவின் சட்டமா அதிபர் மார்க்கஸ் பேக்கர் கூறியவற்றுக்கு சிறிலங்கா வெளியுறவு அமைச்சு கனேடிய அரசுக்கு ஆட்சேபம் தெரிவித்துள்ளது. மார்க்கஸ் பேக்கர் சில கனேடிய எம். பிக்களின் ஒத்துழைப்புடன் சிறிலங்கா அரசுக்கு எதிராக பிரசார வேலைகளில் ஈடுபடுவதாகவும் சிறிலங்கா வெளியுறவு அமைச்சு குற்றஞ்சாட்டியுள்ளது.**

மார்க்கஸ்பேக்கர் இனப்பிரச்சினையை தீர்ப்பதன் பொருட்டு அமைச்சர் தொண்டமானை கனடாவிற்கு அழைத்ததும், அண்மையில் சுவிஸ் அரசு இலங்கை அகதிகளை திருப்பியனுப்புவதற்கு எதிர்ப்பு தெரிவித்தமையும் குறிப்பிடத்தக்கது.

இலங்கை அகதிகளை திருப்பி அனுப்பும் முடிவை சுவிட்சர்லாந்து மறுபரிசீலனை செய்யவேண்டும் என கனடிய சட்டமா அதிபர் மார்க்கஸ் பேக்கர் சுவிட்சர்லாந்து அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்திருந்தது தெரிந்ததே.

இது தொடர்பாக சுவிட்சர்லாந்து அரசாங்கத்திற்கு அனுப்பிவைத்திருந்த கடிதத்தில் இலங்கையில் தமிழர்களின் நிலை குறித்து இலங்கைக்கான சுவிட்சர்லாந்து தூதுவர் அரசிற்குக் கொடுத்திருக்கும் தகவல் தவறானது எனவும் சுட்டிக்காட்டியிருந்தார்.

இது தொடர்பாகவே சிறிலங்கா அரசாங்கம் தனது கடும் ஆட்சேபத்தை கனடிய அரசிற்குத் தெரிவித்துள்ளது.

## வறுமை நிவாரணத்தில் புதிய சலுகைத் திட்டம்

(யாழ்ப்பணம்)

தேர்தல்களை முன்னிட்டு அரசாங்கம் புதிய சலுகைத் திட்டங்களை அறிமுகப்படுத்தியுள்ளது. இதன் ஒரு கட்டமாக ஒரு வயதுக்கு உட்பட்ட குழந்தைகள் உள்ள வறுமை நிவாரண உணவு முத்திரை பெறும் குடும்பங்களுக்கு மேலதிகமாக 100 ரூபா வழங்க அரசு பணித்துள்ளது.

இதேவேளை வறுமை நிவாரண உணவு முத்திரை பெறும் குடும்பங்களை சேர்ந்த ஒரு வயதுக்கும் 18 வயதுக்கும் உட்பட்ட சகலருக்கும் மேலதிக உணவு முத்திரைகளை வழங்கவும் அரசு பணித்துள்ளது.

முன்னர் பாடசாலைகளில் கல்வி கற்கும் 1 வயதுக்கும் 18 வயதுக்கும் உட்பட்டவர்களுக்கே இந்த மேலதிக முத்திரை வழங்கப்பட்டு வந்தது தற்போது இது பாடசாலை

(6 ஆம் பக்கம் பார்க்க)

## சமாதானத்தின் மூலமே யுத்தத்திற்குதீர்வுகாணலாம்

### சர்வோதய தலைவர் கூறுகிறார்

(கொழும்பு)

நான் அண்மையில் வட பகுதிக்கு சென்று திரும்பிய பின்னர் சிறிலங்கா அரசுடனும், போராளிகளுடனும் தொடர்பு கொண்டு இப் பிரச்சினைக்கான தீர்வினைக்

சர்வோதய அமைப்பின்வடக்கு- கிழக்கு மாகாண இணைப்பாளர்களுக்கான கூட்டம் அண்மையில் திருகோணமலை நகர மண்டபத்தில் நடந்த போது அதில் கலந்து கொண்டு பேசிய அவர்

## ஐ.தே.கவின்செல்வாக்கை அதிகரிக்க

## இன்று படகுச்சேவை

கிளாலி - பூநகரி படகுச் சேவை இன்று வழமையான நேரத்திற்கு நடைபெறும் என அரசியற் துறையினர் அறிவித்துள்ளனர்.

## மாகோ நாளை புறப்படும்

[யாழ்ப்பாணம்]

வட பகுதிக்கான ஒரு தொகுதி அத்தியாவசியப பொருள்களை ஏற்றிக் கொண்டு ''மாகோ'' என்ற கப்பல் நாளை திருமலையில் இருந்து பருத்தித்துறை நோக்கிப் புறப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## எதிர்பாராத மோதலில் இரு போராளிகள் வீரச்சாவு



மேஜர் பரமன் (அன்பண்ணல்)



கப்டன் கபில்

முல்லைத்தீவு வட்டுவாகல் பாலத்தில் சிறிலங்கா இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் கட

இம் மோதலில் வீரச்சாவடைந்த முல்லைத்தீவுகோட்ட சிறப்புப் பொறுப்பாளர் மேஜர் பரமன் / அன்பண்

சர்வோதய தலைவர் கூறுகிறார்

(கொழும்பு)

நான் அண்மையில் வட பகுதிக்கு சென்று திரும்பிய பின்னர் சிறிலங்கா அரசுடனும், போராளிகளுடனும் தொடர்பு கொண்டு இப் பிரச்சினைக்கான தீர்வினைக் காண முயலுமாறு உலக நாடுகள் சில என்னைக் கேட்டுள்ளன என்று சர்வோதய அமைப்பின் தலைவர் ஏ. ரி. ஆரியரட்ண கூறியுள்ளார்.

சர்வோதய அமைப்பின் வடக்கு- கிழக்கு மாகாண இணைப்பாளர்களுக்கான கூட்டம் அண்மையில் திருகோணமலை நகர மண்டபத்தில் நடந்த போது அதில் கலந்து கொண்டு பேசிய அவர் மேலும் கூறுகையில், வட பகுதிக்கான எனது பயணம் வெற்றிகரமானதாகவே அமைந்திருந்தது.

(6 ஆம் பக்கம் பார்க்க

பிரேமா கொலையை கொண்டாடி

## பட்டாசு கொளுத்தியவர்கள் இன்று ஐ.தே.கவில் போட்டி

(கொழும்பு)

ஜனாதிபதி பிரேமதாசா கொலைசெய்யப்பட்ட செய்தியறிந்து பட்டாசு கொளுத்திய வர்கள் இன்று ஐ. தே. கவில் போட்டியிடுகின்றனர். இதற்கு ஆவன செய்யுமாறு கட்சியின் புதிய பொதுச் செயலரை கேட்டுக்கொண்டேன் என ஐ. தே. கவின் தேசியப் பட்டியல் மூலம்தெரிவான கலிங்க ஒபேயவன்ச எம். பி தெரிவித்துள்ளார்.

பதவியில்இருந்துவிலகுமாறு கட்சி பொதுச்செயலர் காமினி விஜயசேகர தம்மை கேட்டுக் கொண்டதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

அத்துலத்முதலி கொலை

## தகவல் கொடுக்க தவறிய இளைஞருக்கு அபராதம்

ஜன நாயக ஐக்கிய தேசிய முன்னணியின் முன்னாள் தலைவர் லலித் அத்துலத்முதலியை கொலை செய்த சந்தேகநபர் தொடர்பாக தகவல் கொடுக்கத் தவறியவர் எனக் குற்றம் சாட்டப்பட்ட சத்தியபாலன் சத்தியகுமாருக்கு பத்தாயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

நேற்று முன்தினம் கொழும்பு நீதிமன்றத்தில் மேற்படி வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டதாகவும் அவ் விசாரணையின் போது மேற்படி சந்தேக நபர் தமது குற்றத்தை ஒப்பு கொண்டதைத்தொடர்ந்து நீதிமன்றம் மேற்படி அபராதத்தை விதித்துள்ளது எனவும் தெரியவருகிறது.

## பேராதனை பல்கலை. மாத இறுதியில் திறப்பு

(கொழும்பு)

பேராதனைப் பல்கலைக் கழகம் இம் மாதம் இறுதியில் மீளத்திறக்கப்பட இருப்பதாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழு தெரிவித்துள்ளது.

மாணவர்களுக்கும் நிர்வாகத்திற்கும் இடையில் ஏற்பட்ட பிணக்கைத் தொடர்ந்துமேற்படி பல்கலைக்கழகம். கால வரையறையின்றி மூடப்பட்டிருந்தது எனவும் பேச்சு வார்த்தைநடைபெற்றதைத்தொடர்ந்து மே மாதம் 30 -ம் திகதி மீளத்திறப்பதாக தீர்மானிக்கப்பட்டதாகவும் பல்கலைக் கழகமானியங்கள் ஆணைக் குழு மேலும் தெரிவித்துள்ளது.

திருப்பியனுப்புவதற்கு எதிர்ப்பு தெரிவித்தமையும் குறிப்பிடத்தக்கது.

இலங்கை அகதிகளை திரு

இது தொடர்பாக சுவிட்சர்லாந்து அரசாங்கத்திற்கு அனுப்பிவைத்திருந்த கடிதத்

இது தொடர்பாக ... லங்கா அரசாங்கம் தனது கடும் ஆட்சேபத்தை கனடிய அரசிற்குத் தெரிவித்துள்ளது.

# ஐ.தே.கவின்செல்வாக்கை அதிகரிக்க 1800கோடி பயன்படுத்த டி.பி. முயற்சி

### உலகவங்கி, சர்வதேச நாணய நிதியம் கவலை

தென்மாகாணசபைத் தேர்தல் தோல்வியைத் தொடர்ந்து தமது கட்சியின் செல்வாக்கைப் பெருக்குவதற்கு 1800 கோடி ரூபாவை பயன்படுத்த சிறிலங்கா ஜனாதிபதி டி- பி- விஜேதுங்கா முயல்வதாக சர்வதேச நாணய நிதியமும், உலக வங்கியும் கவலை தெரிவித்துள்ளன.

சிறிலங்கா ஜனாதிபதி மே முதல் திகதியன்று அறிவித்த திட்டங்களை செயற்படுத்த 1800 கோடி ரூபாவரையில் தேவைப்படும் என்றும் தென் மாகாண சபைத் தேர்தல் தோல்வியைத் தொடர்ந்து தமதுகட்சியின் செல்வாக்கைப் பெருக்குவதற்கே இத்தொகை பணத்தை பயன்படுத்த ஐ தே க. முயல்வதாகவும் இவ் அமைப்புக்கள் கருத்து வெளியிட்டுள்ளன. சிறிலங்காவின் எதிர்க்கட்சி அரசியல் வாதிகளும் இத்தகைய கருத்துக்களை வெளியிட்டிருப்பது குறிப்பிடத்தக்கது

# சுவரொட்டி ஒட்டினேனே தவிர கொலை எதுவும் செய்யவில்லை

### பாதாள உலக மன்னன் உபாலி வாக்குமூலம்

(கொழும்பு)

''சுவரொட்டிகளை ஒட்டினேனே தவிர கொலைகள் எதனையும் நான் செய்யவில்லை. என் மீது சுமத்தப்பட்ட கொலைக் குற்றச்சாட்டுகள் அபாண்டமானவை'' என பாதாளஉலகின் மன்னன் எனவர்ணிக்கப்படும் சொத்தி உபலி என்பவர் தெரிவித்தார்.

இவர் நேற்று முன்தினம் அதிகாலை கைது செய்யப்பட்டபின் பம்பலப்பிட்டி பொலிஸ் நிலையம் கொண்டு வரப்பட்டார் அங்கு வைத்து பொலிஸ் விசாரணை நடைபெற்றபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் அவர் தெரிவிக்கையில் ''நான் பத்திரிகையாளரைச் சந்திக்க விரும்புகிறேன். அதற்கான ஏற்பாட்டைப் பொலிசார் செய்துதர வேண்டும்.

கட்டுகஸ் தோட்டையில் நான் தங்கியிருந்த போது பொலிசார் என்னைத் தேடுவதாக அறிந்தேன். அன்று நண்பகல் சட்டத்தரணியுடன் அருகிலுள்ள பொலிஸ் நிலையம் சென்றுசரணடைய ஆயத்

(6 ஆம் பக்கம் பார்க்க)

# புலிகள் விவகாரம் பற்றி ஜெயலலிதா தொலைக்காட்சி விவாதத்திற்குதயாரா

### ராஜேஷ் பைலட் கேள்வி

(சென்னை)

இந்திய மத்திய அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் தொடர்பு இருப்பது பற்றி தமிழக முதல்வர் ஜெயலலிதா வெளியிட்டுள்ள கருத்து தொடர்பாக அவர் தொலைக் காட்சி மூலமான விவாதத்திற்குதயாராக இருகின்றாரா என்று மத்திய உள் துறை இணை அமைச்சர் ராஜேஷ் பைலட் கேள்வி எழுப்பியுள்ளார்.

வழிப்பறிக் கொள்ளைகள் தொடர்வது பற்றி சட்டப் பேரவையில் முதல்வர் குறிப்பிடுகையில் மத்திய அரசு தமது அரசைக் கவிழ்ப்பதற்கு சதி செய்வதாக குறிப்பிட்டது பற்றி அவரிடம் கேட்கப்பட்டபோது ஒரு மாநில முதல்வர் இவ்வாறு பேசியிருப்பது துரதிர்ஷ்டவசமானது இது எம்மை எங்கு கொண்டு போகிறது என்பதே தெரியவில்லை எனவும் தெரிவித்தார்.

தமிழக அரசைக் கவிழ்க்கும் நோக்கம் எதுவும் மத்திய அரசுக்கு இல்லை என்றும் ஜனநாயக ரீதியாக

(6 ஆம் பக்கம் பார்க்க)

### மேஜர் பரமன் (அன்பண்ணல்) — கப்டன் கபில்

முல்லைத்தீவு வட்டுவாகல் பாலத்தில் சிறிலங்கா இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் கடந்த 11 ஆம் திகதி இடம்பெற்ற எதிர்பாராத மோதலில் இரு விடுதலைப்புலிகள் போராளிகள் வீரச்சாவடைந்தனர் இதன் போது ஒரு இராணுவச் சிப்பாயும் கொல்லப்பட்டார்.

இம் மோதலில் வீரச்சாவடைந்த முல்லைத்தீவுகோட்ட சிறப்புப் பொறுப்பாளர் மேஜர் பரமன் / அன்பண்ணல் (மட்டக்களப்பு), கப்டன் கபில் (தெய்வேந்திரன் புவனேஸ்வரன் கிளிநொச்சி) ஆகியோருக்கு தமிழீழ விடுதலைப்புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

மறைவிடத்தில் வைக்கப்பட்டிருந்த

## ராணுவத்தினர் கைக்குண்டு பொலிசாரால் மீட்பு

(கொழும்பு)

வரக்காப் பொல பொலிஸ் பகுதியில் பொது மக்கள் வழங்கிய தகவல்களைத் தொடர்ந்து பல கைக்குண்டுகள் பொலிசாரினால் கைப்பற்றப் பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

வரக்காப்பொல தோட்டத்தில் மறைவிடத்தில் இருந்து மேற்படி கைக்குண்டுகள் கைப்பற்றப்பட்டதாகவும் இது இராணுவத்தினருக்கு சொந்தமான ஜே ஆர் ரக குண்டுகள் என பொலிஸ் வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளன.

சர்வதேச செஞ்சிலுவைச்சங்க

## யாழ். வதிவிடபிரதிநிதியாக மேரிபேர்க்கின்ஸ் நியமனம்

செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் யாழ் வதிவிடப் பிரதிநிதியாக மேரி பேர்க்கின்ஸ் என்பவர் நியமிக்கப் படவுள்ளார். எதிர்வரும் 16ஆம் திகதி இவர் யாழ்ப் பாணம் வரவுள்ளார். தற்போது கடமையில் இருக்கும் வதிவிடப் பிரதிநிதி அடுத்த மாதம் இங்கிருந்து இடமாற்றம் பெற்றுச் செல்கிறார் புதிதாக நியமிக்கப் படவிருக்கும் அதிகாரி கென்யா, கம்போடியா, முன்னாள் சோவியத் குடியரசுகள் போன்ற பல இடங்களில் கடமையாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது. (. நி)

## அத்தியாவசிய சேவை; அதிகாரிகளுடன் பேச்சு

(கொழும்பு)

யாழ். குடாநாட்டின் அத்தியாவசிய சேவைகள்குறித்து புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சின் உயர் அதிகாரிகளுடன் யாழ். செயலக திட்டப்பணிப்பாளர் திரு. எஸ். பத்மநாதன் பேச்சுவார்த்தை நடாத்தியுள்ளார்.

யாழ். மாவட்டத்துக்கு கப்பல் மூலமாக அனுப்பிவைக்கப் பட வேண்டியஅத்தியாவசியப் பொருட்கள் குறித்தும் குடாநாட்டின் ஏனைய அத்தியாவசிய சேவைகள் குறித்தும் மேற்படி பேச்சுவார்த்தையின் போது ஆராயப்பட்டது. இவற்றைவிட யாழ். மாவட்டத்தில் இராணுவத்தாக்குதல்கள் காரணமாக சேதமடைந்த அரச திணைக்களங்

(6ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### தவறிவிட்டது

11-05-94 அதிகாலையில் வல்வெட்டித்துறைக்கும்-நெல்லியடிக்கும் இடையில் எனது Hand Bag தவறிவிட்டது கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து க. சண்முகசுந்தரம் மாவீரர் வீதி, வல்வெட்டித்துறை என்ற முகவரியில் தொடர்பு கொள்ளவும் தகுந்த சன்மானம் வழங்கப்படும்.
(8271)

### விற்பனைக்குண்டு

தீராந்திகள், இரும்புக்கேற் (சிறியது, பெரியது.) யன்னல், கதவு நிலைகள் விற்பனைக்குண்டு ''பூரணா டிஸ்பென்சறி' 46, இராணி வீதி நல்லூர், (கல்வித்திணைக்கள த்திற்கருகில்) (8267)

### ஆள் தேவை

முகாவில் ஆற்றங்கரை திரியாய் அம்மன் கோவில் வளவில் உள்ள தென்னம்பிள்ளைகளுக்கு நீர் ஊற்ற ஆள் தேவை தொடர்பு திரியாய் அம்மன். பரிபாலன சபை 20-5-94 வெள்ளி பொங்கல் அன்று நேரிலும் சந்திக்கலாம் சம்பளம் நரில பேசித்தீர்மானிக்கப்படும். (8263)

### முழு நெல்லிக்காய் தேவை

முழு நெல்லிக்காய்களை நாம் கொள்வனவு செய்கின்றோம் Taste Line Industries (PVT) Ltd 14 Seenie. Lane Jaffna (சி-9408)

# அரசின் சமூகநலன் திட்டம் பணவீக்கத்தை ஏற்படுத்தும்

## பொருளியலாளர் கருத்து

(கொழும்பு)

1800 கோடி ரூபா செலவில் வாக்காளர்களைக் கவருவதற்காக சிறிலங்கா அரசாங்கத்தால் ஆரம்பிக்கப்பட்டுள்ள சமூகநலத் திட்டங்கள் பெருமளவிலான பணவீக்கத்தை ஏற்படுத்தும் என்று அரசாங்கத்தின் சிரேஷ்ட பொருளியலாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

சமூகநலத் திட்டத்திற்கென செலவிடப்படவுள்ள இந்த 1800 கோடி ரூபா பணத்தால் ஏற்படக்கூடிய விளைவுகளையும் அந்நபர் சுட்டிக்காட்டியுள்ளார். வரிகளை அவர்களால் உயர்த்த முடியாது ஏனெனில் அதனால் பொருட்களின் விலைகள் உயர்ந்துவிடும். அநேகமாக கடன் பெறுவதன் மூலம் பெற்றுக் கொள்வார்கள். இதன் மூலம் பணவீக்கம் உயர்வடைந்து செல்லும் என்பதே இதன் அர்த்தமாகும். வட்டி வீதம் அதிகரிக்கப்படல் வேண்டும் என்பதும் இதனுடைய அர்த்தமாக இருத்தல் வேண்டும் எனக் குறிப்பிட்டுள்ளார் அந்தப் பொருளியல் நிபுணர். ஆனால் இது தொடர்பாக கருத்து தெரிவித்துள்ள வேறு சில பொருளியலாளர்கள் அண்மையில் பெய்த நல்ல மழையைத் தொடர்ந்து பொருளாதாரத் துறையில் நல்ல முன்னேற்றம் காணப்படுகிறது. இதனால் பணவீக்கம் அதிகரிக்க சந்தர்ப்பம் இல்லை என கருத்து வெளியிட்டுள்ளனர். நிதிப் பற்றாக்குறை காரணமாகக் கடந்த வருடம் கைவிடப்பட்ட பாடசாலைச் சிறுவர்களுக்கான இலவசச் சீருடை, மதிய உணவுத் திட்டம் போன்றவற்றை மீண்டும் நடைமுறைப்படுத்தப் போவதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

முக்கியத்துவம் வாய்ந்த தென்மாகாணசபைத் தேர்தலில் எதிர்க்கட்சியான பொதுமக்கள் ஐக்கிய முன்னணியிடம் ஐ.தே. கட்சி தோல்வியுற்றதைத் தொடர்ந்து இச்சமூகநலத் திட்டங்கள் அரசினால் அறிவிக்கப்பட்டன. இவ்வருட இறுதிக்குள் நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலுக்கும் அடுத்த வருட ஆரம்பத்தில் நடைபெறவுள்ள பாராளுமன்றத் தேர்தல்களுக்குமான ஒரு தந்திரமாக இத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என தெரிவிக்கப்படுகிறது.

# டிப்ளோமா பெற்றோருக்கு பல்கலைக்கழக அனுமதி

## களனி பல்கலைக்கழகம் முடிவு

பல்கலைக்கழக இணைப்புக் கல்லூரிகளில் டிப்ளோமா பெற்றவர்களை பட்டப் படிப்புப் படிக்க அனுமதி வழங்க களனிப் பல்கலைக்கழகம் தீர்மானித்துள்ளது. பல்கலைக்கழக கல்வி அமைச்சர் திஸ்ஸ அத்தநாயக்க இதனைத் தெரிவித்தார்.

பல்கலைக் கழக இணைப்புக் கல்லூரிகள் மாணவர் ஒன்றியப் பிரதிநிதிகள் அமைச்சரைச் சந்தித்தபோதே அவர் இதனைக் கூறினார்.

ஒன்பது பல்கலைக்கழக இணைப்புக் கல்லூரிகளில் டிப்ளோமா பெற்றவர்களைத் தேசிய பல்கலைக்கழகங்கள் பட்டப்படிப்பிற்கு அனுமதி மறுப்பதை மாணவர் ஒன்றியப் பிரதிநிதிகள் அமைச்சருக்கு எடுத்துக் கூறினார்கள்.

1994 செப்டம்பரில் இணைப்புக் கல்லூரிகளில் டிப்ளோமாவில் தேறும் மாணவர்களுக்கு ஆங்கிலம், விஞ்ஞானம் மற்றும் கணித ஆசிரியர் நியமனம் வழங்க கல்விச் சேவைகள் ஆணைக்குழு முன்வந்துள்ளதாகவும் அவர் கூறினார்.

# 20 நீர் இறைப்பு இயந்திரம் கப்பலில் எடுத்துவரப்படும்

யாழ் மாவட்ட கமநல சேவைகள் திணைக்களத்திற்கு இம்முறை 20 நீர் இறைக்கும் இயந்திரங்களும் 65 தெளிகருவிகளும் எடுதது வரப்படவுள்ளன.

அத்துடன் 200 மெற்றிக் தொன் அமோனியாவும் எடுத்துவரப்படவுள்ளன என கமநல சேவைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது இவை றுகுணு கப்பலில் எடுத்துவரப்படவுள்ளதாகத் தெரியவருகிறது. (பா)

# யுத்தமே தீர்வு என்றால் பாரிய இழப்புகளே ஏற்படும்

## மட்டு. எம். பி. எச்சரிக்கை

(மட்டக்களப்பு)

தமிழர்கள் தமது உரிமைக்காக கடந்த 40 ஆண்டுகளாக சாத்வீக போராட்டம் நடத்தியும் எந்தவித பலனும் ஏற்படாத நிலையில் இளைஞர்கள் ஆயுதமேந்திப் போராட வேண்டிய நிலை ஏற்பட்டது. இழப்புகளே ஏற்படவேண்டிய நிலைஏற்படும் என எச்சரித்தார்

கடந்த 1990ஆம் ஆண்டில் நடைபெற்ற வன்செயலின் மட்டக்களப்பு மாவட்டம் மிக மோசமாக பாதிக்கப்பட்டது. இப்பகுதியில் இதுவரை 7000

# யூனியன் கல்லூரி வெற்றி

(சுன்னாகம்)

யாழ். கல்வி வலயம்-2 பாடசாலை மாணவர்களுக்கிடையே நடாத்தப்பட்ட கரப்பந்தாட்டப் போட்டியில் 17 வயதுப் பிரிவில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியும், 19-வயதுப் பிரிவில் புத்தூர் சோமஸ்கந்தாக் கல்லூரியும் வெற்றி பெற்றன.

## இன்றைய நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

யாழ். சன்மார்க்க மகா வித்தியாலயத்தில் இயங்கிவரும் காரைநகர் கலாநிதி தியாகராஜா மத்திய மகா வித்தியலயத்தின் வருடாந்த 'இல்லமெய்வல்லுனர்போட்டி இன்று சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு வித்தியாலய அதிபர் திருமதி தே. பாலசிங்கம் தலைமையில் யாழ் புனித மரியாள் (ஓ.எல்.ஆர்) மைதானத்தில் நடைபெறும் (22)

∴ ∴

(யாழ்ப்பாணம்)

நாவற்குழி வனிதா குடியிருப்பில்இயங்கும் தம்பாட்டி அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை, நாரந்தனை கணேச வித்தியாலயம் ஆகியன இணைந்து நடாத்தும் 'இல்ல தடகளப் போட்டி' இன்று பிற்பகல் 2 மணிக்கு திரு. சா. தியாகலிங்கம் தலைமையில் வித்தியாலய மைதானத்தில் நடைபெறும். (22)

## ஆய்வுப் பயணம்

யாழ். பல்கலைக்கழக புவியியற்துறை முதலாம் வருட மாணவர்கள் சூழல் பற்றிய ஒரு வெளிக்கள ஆய்வை மேற்கொள்ளும் முகமாக இன்று சனிக்கிழமை யாழ் நகரின் கரையோரப் பிரதேசங்களுக்கு ஆய்வுப் பயணம் ஒன்றை மேற்கொள்கின்றனர்

இவ் ஆய்வுக்கு வேண்டிய உதவிகளை வழங்குமாறு இப்பகுதி வாழ் மக்களைப் புவியியற்துறைத் தலைவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

**SPOKEN ENGLISH**
by
BRITTO
புதிய பிரிவு
ஆரம்பம்
14 - 05 - 94
(1 மணி)

புதிய
உயர் கல்லூரி
ஆரியகுளம் சந்தி, யாழ்.
(சி-9384)

# மரவேலை பயிற்சிக்கு விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

அரச மரவேலை பயிற்சிப் பாடசாலையில் பயிற்சிநெறிக்காக பயிலுநர்களை சேர்ப்பதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன விண்ணப்பதாரிகள் 8ஆம் வகுப்பில் சித்தியடைந்தவராகவும் 14வயதிற்கு குறையாமலும் 30வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்

பயிற்சிக்காலம் ஒரு வருடமாகும். பிரதேச செயலர் தீர்மானத்தின்படி பயிற்சிக் காலத்தில் பயிலுநர் பயிற்சிக்காக சமூகமளிக்கும் நாள்ஒன்றிற்கு ஆறுமாத ஊக்குவிப்பு பணமாக 15 ரூபாவும் உற்பத்தி பொருள்களின்செய் கூலியில் 80 வீத லாபப்பணமும் வழங்கப்படும்ஆகக்குறைந்தது 175 வேலை நாட்கள் பயிற்சியை முடித்த பயிலுநர் மட்டும் அகில இலங்கை பரீட்சைக்குத் தோற்ற அனுமதிக்கப்படுவர் பரீட்சையில சித்தியடைந்தவர்களுக்கு ஒரு வருட மரவேலைத் தொழில்நுட்ப சான்றிதழும் சிறப்பு சித்தியடையும் மாணவர்களுக்கு வெலேசனா உயர் பயிற்சிநிலையத்தில் ஆறுமாத பயிற்சியும் இயந்திரசாதன மரவேலை உயர்தர பயிற்சி சான்றிதழும் வழங்கப்படும் மேலதிக விபரங்களை அரச மரவேலை பயிற்சி பாடசாலையில் பெற்றுக் கொள்ள முடியும் என அறிவிக்கப்படுகிறது.

# அயலவர் மோதல் தாக்கியவருக்கு அபராதம்

(தென்மராட்சி)

கொடிகாமம் தவசிக்குளம் என்னும் பகுதியில் அயலவர் இருவருக்கிடையிலான தர்க்கம் இறுதியில் சண்டையாக முடிந்ததில் ஒருவர் கம்பியால் தாக்கப்பட்டு தலையில் படுகாயம் அடைந்தார் என்று சாவகச்சேரி காவல்துறை பணிமனையில் முறைப்பாடு செய்யப்பட்டது,

இது சம்பந்தமாகக் காவல் துறையினர் மன்றில் குற்றவாளியை முற்படுத்தியபோது குற்றவாளி குற்றத்தை ஒப்புக்கொண்டதின் பிரகாரம் குற்றவாளிக்கு அபராதமாக 2000 ரூபாவும் இழப்பீட்டுத்தொகையாக 2500 ரூபாவும் கட்டும்படியும் 15 நாள் சிறைத்தண்டனையும் வழங்கி தமிழீழ சாவகச்சேரி நீதிமன்று தீர்ப்பளித்தது. இது சம்பந்தமாக எவ்வித சண்டையிலும் இனி ஈடுபடக்கூடாது என எச்சரிக்கப்பட்டது. (86)

## நினைவு கூருகின்றோம்..

## 14.05.1994

1985ஆம் ஆண்டு இதேதினத்தில் வில்பத்தைக் காட்டில் சிறிலங்கா ராணுவத்தினருடனான சமரின் போது விழுப்புண்ணடைந்த நிலையில் சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய-

லெப். பிரசன்னா (இரத்தினம் சதானந்தன் -110/2 திருவையாறு கிளிநொச்சி)

யாழ்- மானிப்பாயில் எமது சவர்க்காரத்தொழிற்சாலையொன்றின் மீது சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட முற்றுகையில் வீரச்சாவெய்திய-

கரன் (கணபதிப்பிள்ளை சிவசரணம் - இயற்றாலை வரணி - யாழ்)

குட்டி (சின்னத்தம்பி பரமேஸ்வரன் - நவாலி தெற்கு மானிப்பாய்)

தேவு (சின்னையா சாந்தகுமார் - ஆனைக்கோட்டை யாழ்)

1988ஆம் ஆண்டு [illegible] பகுதியில்


கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் இடம்பெற்ற இறுதிப் போட்டிகளில் 17-வயதுப் பிரிவில் யூனியன் கல்லூரி ஹாட்லிக் கல்லூரியையும், 19-வயதுப் பிரிவில் புத்தூர் சோமஸ்கந்தாக் கல்லூரி சுச்சுவேலி மகாவித்தியாலயத்தையும் வென்றன. போட்டியில் வெற்றி பெற்ற அணிகளுக்கான வெற்றிக் கேடயங்களை வலயம் - 2 கல்விப் பணிப்பாளர் திரு. கந்தசாமி வழங்கினார். தமிழீழ கல்வி மேம்பாட்டுப் பேரவை சார்பில் திரு. இளங்குமரன் கலந்து கொண்டார்.

(11)

... இன்று இடம்பெற்றுக் கொண்டிருக்கும் யுத்தத்திற்கு அரசு முற்றுப்புள்ளி வைப்பதானால் விடுதலைப் புலிகளை அழைத்து பேச்சு நடத்தி தீர்க்கமான முடிவை எடுத்தல் வேண்டும் என மட்டக்களப்பு மாவட்ட தமிழ் எம். பி. ஒருவர் தெரிவித்துள்ளார்.

கிரானில் நடைபெற்ற விளையாட்டு விழாவில் கலந்து கொண்டு பேசிய அவர் மேலும் நியாயமான கோரிக்கைகளை தீர்க்க விரும்பாமல் அரசு யுத்தமே தீர்வென்று எண்ணினால் தொடர்ந்தும் பாரிய ... இளைஞர்கள் காணாமற் போயுள்ளனர். இவர்களுக்கு என்ன நடந்தது என்றே தெரியாது. எமது பகுதியில் பல இளைஞர்கள் காணாமற் போனாலும் இன்று இந்த விளையாட்டுவிழாவினை நடத்தும் இளைஞர்களை பாராட்டுகிறேன். என்னதான் நேரினும் எமது கலை கலாசாரங்களை அழியாது பாதுகாக்க வேண்டியது எமது கடமையாகும் என அவர் மேலும் தெரிவித்தார்.

## வீரதீரச் செயல்கள் பிற்போடப்பட்டுள்ளன



மருத்துவர் பெருந்திறல் சான்றோன் சண்டோ

எம். துரைரத்தினம் அவர்களும் மாணவர்களும் வழங்கும்

# வீரதீரச்செயல்கள்

வட்டுக்கோட்டை இந்துக்கல்லூரி மைதானத்தில் 14.5.94 சனிக்கிழமை நடைபெறவிருந்த இந்நிகழ்வு தவிர்க்க முடியாத காரணத்தால் 21. 5. 94 சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

சிரமங்களுக்கு வருந்துகிறோம். (8272)

# முக்கிய அறிவித்தல்

## கலை ஊடக இணைய விசேட பொதுச்சபைக் கூட்டம்

யாழ். மாவட்டத்திலுள்ள கலை ஊடக இணைய உறுப்பினர்களுக்கான பொதுச்சபைக் கூட்டம் 5.6 94 அன்று காலை 9 30 மணிக்கு யாழ் இந்து குமாரசாமி மண்டபத்தில் நடைபெறும். இக்கூட்டத்தில் யாழ் மாவட்டத்திலுள்ள வீடியோ படப்பிடிப்பாளர்கள், வீடியோ நாடா விநியோகஸ்தர்கள், ஓடியோ நாடா விநியோகஸ்தர்கள், புகைப்படத்துறையினர், தொழில்நுட்ப சேவையாளர்கள் (ரிவி-டெக் ஜெனரேற்றர்) சகலருக்கும் அங்கத்துவ அட்டை விநியோகிக்கப்பட இருப்பதால் தவறாது கலந்து கொண்டு உங்கள் அங்கத்துவ அட்டைகளை பெற்றுக் கொள்ளவும். 30-5-94 க்கு முன் சகல அங்கத்தவர்களும் உங்கள் அங்கத்துவ அட்டைகளை கலை ஊடக இணையத்துக்கு வந்து பதிந்து செல்லவும்.

குறிப்பு: கலை ஊடக இணையத்தில் உறுப்புரிமையை உறுதி செய்வதன் மூலம், அங்கத்துவ அட்டையைப் பெற்று, இத்தொழில் துறையிலீடுபடுவதற்கான முற்றான அனுமதியைப் பெறுமாறு கோருகிறோம்.

செயலாளர்

கலை ஊடக இணையம்

(சி-9419)

## சகல வீடியோ நாடா விநியோகஸ்தர்களுக்கும்

நிதர்சனத்தினர் வழங்கும்

"காற்றுவெளி"

நிதர்சனம் கலைபண்பாட்டுக்கழகம் இணைந்து வழங்கும்

"மண்ணுக்காக"

யாழ் மாவட்டத்திலுள்ள சகல வீடியோ நாடா விநியோகஸ்தர்களும் தவறாது இவ்வீடியோ நாடா படத்தை கலை ஊடக இணையத்தில் பதிவு செய்து (RECORDING) பெற்றுக் கொள்ளவும்.

"பங்குனி 94" ஒளிவீச்சு வெளிவந்துள்ளது. இணையத்தில் பதிவு செய்து பெற்றுக் கொள்ளலாம்

-கலை ஊடக இணையம்

(சி-9418)

1988ஆம் ஆண்டு மட்டு- களுவாஞ்சிக்குடிப் பகுதியில் இந்தியப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய-

**[illegible]** (- மாங்காடு - மட்டு)

திருமலையில் தேசவிரோதிகளினால் சுட்டுக்கொல்லப்பட்ட அதே இடத்தைச் சேர்ந்த திரைப்படத்தயாரிப்பாளரான தமிழ்ப்பெண்

1989ஆம் ஆண்டு யாழ் - திருநெல்வேலியில் இந்தியப்படையினருடனான சமரின்போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய-

**2ம் லெப். டெஸ்மன்** (வேலையா ரமேஸ்குமார் சிவன்வீதி - திருமலை)

மிருசுவிலில் இந்தியப்படையினரின் காவலரண் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின்போது வீரச்சாவெய்திய-

**கப்டன் கில்மன்** (கிருஷ்ணசாமி இராமச்சந்திரன் மீசாலை தெற்கு - சாவகச்சேரி)

இதே சம்பவத்தின்போது பேரூந்து ஒன்றின்மீது இந்தியப்படையினர் மேற்கொண்ட துப்பாக்கிச்சூட்டில் கொல்லப்பட்ட நெடுந்தீவு 3-ம்வட்டாரத்தைச்சேர்ந்த தமிழ்ச் சிறுமி

மணலாறு - நெடுங்கேணிப் பகுதியில் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்ட இந்தியப்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட உணவுவிடுதி ஊழியர் உட்பட 02 தமிழர்கள்

யாழ் - மருத்துவமனையில் இந்தியப்படையினரால் சடலமாக ஒப்படைக்கப்பட்ட தமிழிளைஞன்

1991ஆம் ஆண்டு அம்பாறை - தங்கவேலாயுதபுரம் பகுதியில் எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட பொறிவெடி விபத்தில் வீரச்சாவெய்திய-

**கஜன்** (- கல்யாணகுமார் - தம்பிலுவில் அம்பாறை)

1992ஆம் ஆண்டு மட்டு - தும்பன்கேணிப்பகுதியை சிறிலங்கா இராணுவம் மற்றும் தேசவிரோதசக்திகள் சுற்றிவளைக்க முயன்றபோது ஏற்பட்ட சமரில் வீரச்சாவெய்திய-

**2ம்-லெப் தனஞ்செயன் [illegible]** (சுப்பிரமணியம் தனஞ்செயன் - பழுகாமம் - மட்டு)

ஆதரவாளரான

**ஞானசேகர் ஜெயகணேஷ்** (பழுகாமம் -மட்டு)

திருமலை - ஈச்சிலம்பத்தை முகாம இராணுவம் வெருகல் முட்டுச்சேனை, கல்வெட்டுவான் பகுதிகளை சுற்றிவளைப்பு நடவடிக்கையில் ஈடுபட்டபோது வெட்டிக்கொலை செய்யப்பட்ட தீவிர ஆதரவாளரானமுட்டுச்சேனை பாடசாலை அதிபர்

**கணபதிப்பிள்ளை** (சம்பூர், மூதூர் திருமலை)

பாடசாலைப் பணிகளில் ஈடுபடும் போது விபத்தில் பலியான விடுதலைப்புலிகள் மாணவர் இயக்க உறுப்பினர், ஆதரவாளரான

**[illegible]ணன் (. . .)**

ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்**


(சி-9415)

நல்லூர் ... நூலகம் மாநகராட்சி மன்றம்

18-வது வெற்றுப் போத்தல் பரிசு குலுக்கல் போட்டியில் பரிசு பெற்றோர் இலக்கங்கள் வருமாறு:

| | | | |
|---|---|---|---|
| 1863 | 3964 | 5422 | 5608 |
| 1866 | 4424 | 5425 | 5756 |
| 1878 | 4477 | 5429 | 5762 |
| 1883 | 4773 | 5431 | 5763 |
| 1885 | 4776 | 5432 | 5776 |
| 1886 | 4778 | 5506 | 5852 |
| 1889 | 4938 | 5509 | 5866 |
| 2456 | 4942 | 5601 | 5881 |
| 3775 | 4957 | 5603 | 6063 |
| 3777 | 5415 | 5604 | 6065 |

14-வது போட்டியில் இன்றே பங்கு பற்றுங்கள். பங்குபற்றுவதற்கான நிபந்தனை ஜாம், கோடியல் அல்லது பியர் ஏதாவது 5 போத்தல்களை கொடுத்து அதற்கான பணத்துடன் ஒரு அதிர்ஷ்டலாபச் சீட்டையும் பெற்றுக் கொள்ளுங்கள்.



TASTE LINE INDUSTRIES (PVT)LTD,
14, Seenier Lane Jaffna.

(சி-9407)

## தேவை

**புழுக்கொடியல் / ஒடியல்**

தரமான புழுக்கொடியல் / ஒடியல் நியாய விலையில் கொள்வனவு செய்யப்படும்.

தொடர்பு:
பனை அபிவிருத்திச் சபை,
தேசிய வீடமைப்புச் செயலகம்,
கண்டி வீதி, யாழ்ப்பாணம்.

(சி-9403)

# தேர்தல் முன்னெச்சரிக்கை பலர் பொலிசாரால் கைது

## அரசின் உத்தரவையடுத்து நடவடிக்கை

(கொழும்பு)

தலைமறைவுக் குற்றவாளிகளையும், பொலிசின் பிடியில் சிக்காது திரியும் குற்றவாளிகளையும் வலை வீசிப் பிடிக்கும் முயற்சியில் பொலிஸ் ஈடுபட்டுள்ளது. வரும்தேர்தலின் போது இவர்களால் அபாயம் ஏற்படலம் என்று கருதி ஒரு பாதுகாப்பு நடவடிக்கையாக இவர்களைக் கைது செய்யும் படி அரசு பணித்துள்ளது.

பொலிஸ் குற்றப் புலனாய்வுப் பிரிவும், குற்ற விசாரணைப் பிரிவும் சென்றகிழமை விடியற்காலையில் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையில் கொழும்பில் 12 குற்றவாளிகள் கைது செய்யப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்டவர்களில் பொலிசாரால் தேடப்பட்டு வரும் வனத்த முல்லையைச் சேர்ந்த தம்பா சுநாவும் ஒருவராகும். கைதாகியவர்கள் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். கைதானவர்களை விடுதலை செய்யும் படி, எந்தக் கட்சிக்காரர் கேட்டாலும் கைதியை விடுதலை செய்ய வேண்டாம் என உயர் மட்டம் பணித்துள்ளது.

கைது செய்யப்பட்டவர்கள் பலர் விசாரணையின் போது தம்மைக் குற்றச் செயல்களில் ஈடுபடக் காரணமாயிருந்த சில பெரிய மனிதர் பற்றிய விபரங்களையும் தெரிவித்துள்ளனர் சில குற்றவாளிகள் கொழும்பை விட்டு இடம் மாறி விட்டதை அடுத்து கொழும்புக்கும் வெளியிலும் தேடுதலில் ஈடுபட்டுள்ளனர். கட்டுநாயக்கா விமான நிலையம் உசார்படுத்தப்பட்டுள்ளது.

### தீர்மானமில்லை

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் உட்கட்சித் தேர்தல்கள் நடத்தப்படுவது தொடர்பாக இன்னமும் எந்தத் தீர்மானமும் மேற்கொள்ளப்படவில்லை எனக் கூறப்படுகிறது 1986 ம் ஆண்டிற்குப் பின்னர் சுதந்திரக்கட்சி உட்கட்சித் தேர்தல் எதையும் நடத்தவில்லை எனவும் சுட்டிக் காட்டப்படுகிறது.

### விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது

(நல்லூர்)

மனையியல் பாட சேவைக் காலப் பயிற்சி ஆலோசகர் பதவிக்கு வெற்றிடங்கள் வடக்குக்கிழக்கு மாகாணகல்வி அமைச்சின் கீழ் இயங்கும் கோட்டக்கல்வி அலுவலகங்களில் உள்ளதாகவும் உரிய விண்ணப்பதாரிகளிடம் இருந்தது விண்ணப்பங்

## மாதாந்த உதவிப் பணம் உடன் பெறலாம்

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவு, வேலணை, நயினாதீவு பகுதிகளைச் சேர்ந்த மக்கள் சித்திரை மாதத்திற்கான பொதுசன மாதாந்த உதவிப்பண கொடுப்பனவை யாழ்ப்பாண மத்திய தபாலகத்தில் தற்காலிகமாக இயங்கும் வேலணை, புங்குடுதீவு தபாலகங்களில் பெற்றுக் கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது

இத்துடன் கெற்பலி அகதி முகாமில் வசிக்கும் மக்களில் இக்கொடுப்பனவை பெறுவோர் விடத்தல்பளை உப தபாலகத்தில் பெற்றுக் கொள்ளலாம் என கேட்கப் பட்டுள்ளது.

இதேவேளை புற்றுநோய், தொழுநோய், கசரோகம் என்பவற்றின் 1994 சித்திரை மாத கொடுப்பனவுகளை புங்குடுதீவு, வேலணை, விடத்தல்பளை ஆகிய தபாலகங்களில் பெற்றுக் கொள்ளலாம் என வேலணை பிரதேச செயலர் அறிவித்துள்ளார். (தி,பா)

## இந்நாளில் நினைவு கூருகின்றோம்



பிறப்பு

25 - 10 - 1973

வீரச்சாவு

## விக்கிரம வீர சூரியவிற்கு மேலும் ஒரு பதவி

கலாநிதி விக்கிரம வீரசூரிய திட்ட அமுலாக்கல் அமைச்சின் செயலாளராக ஜனாதிபதியினால் நியமனம் செய்யப்பட்டுள்ளார். இதே வேளை தொடர்ந்து ஜனாதிபதியின் ஆலோசகராகவும் கடமையாற்றுவார் என்பது குறிப்பிடத்தக்கது.

கடந்த புதன் மேற்படி செயலாளர் பதவிக்கான நியமனம் ஜனாதிபதி மாளிகையில் வைத்து வழங்கப்பட்டதாக தெரிய வருகின்றது.

**மட்டக்களப்பில்**

## ஆடைதயாரிப்புஊழியரை மோசமாக நடத்துகின்றனர்

மட்டக்களப்பு ஆடைத் தொழிற்சாலையில்பணிபுரியும் தமிழ்ப்பெண்கள் மிக மோசமாக நடத்தப்பட்டு வருவதாகக் கூறப்படுகின்றது.

சிறிலங்காவில் திறக்கப்பட்டுள்ள ஏனைய ஆடைத்தொழிற்சாலைகளில் பணி புரிபவர்களை விட மட்டக்களப்பில் பணி புரிவோருக்கு மிகவும் குறைந்த ஊதியமே வழங்கப்பட்டு வருவதாகவும், எனினும் வேலை நிலைமை இங்கு மிகமோசமாக இருப்பதாகவும் கூறப்படுகிறது. மட்டக்களப்பு ஆடைத் தொழிற்சாலையில் பணிபுரியும் பெண்கள் 7.30 மணிமுதல் 5.30 மணிவரை வேலை வாங்கப்படுவதாகவும், 500ரூபாமுதல் 750 வரையிலேயே ஊதியம் வழங்கப்படுவதாகவும், கூறப்படுகிறது. இதே வேளை வறுமை நிலையிலுள்ள குடும்பப் பெண்களின் வறுமை நிவாரண முத்திரை கூட இவ் வேலை வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளமையால் பறிக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

## திருட்டுமுயற்சி முறியடிப்பு

பட்டப்பகலில் எவரும் இல்லாத வேளை வீட்டுக்கதவை உடைத்து திருட்டு நடத்த முயன்ற நபரை அயலவர்கள் துரத்திப் பிடித்து காவல் துறையினரிடம் ஒப்படைத்தனர்.

இச்சம்பவம் கடந்த 9 ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் வண்ணார்பண்ணையில் நடைபெற்றது.

## 5-ம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு:

17.10.1923

இறப்பு:

14.5.1989



‘இயேசு உங்களைக் குணமாக்குகிறார்’

## விசேஷ குணமளிக்கும் ஆராதனை

போதகர் நிரோஷன் அமிர்தலிங்கம் (''இயேசு சந்திக்கிறார்'' ஊழிய ஸ்தாபகர் கொழும்பு) அவர்கள் யாழ்ப்பாணத்தில் ஊழியத்திற்காக வருகை தந்துள்ளனர்.

திகதி: 15 05-94 (ஞாயிறு)
நேரம்: காலை 9.00 மணி.
இடம்: கல்வாரி பூரண சுவிசேஷ ஊழியங்கள், பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

விசேஷ குணமளிக்கும் ஆராதனை அனைத்து வியாதியஸ்தர்கள், பயத்தோடிருப்பவர்கள், பில்லி சூனியக் கட்டிலிருப்பவர்கள் யாவருக்காகவும் ஜெபிக்கப்படும். இன்றே விடுதலை பெறுவீர்.

யாவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

போதகர்
கல்வாரி பூரண சுவிசேஷ
ஊழியங்கள்

(8268)

---

## விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி றோட்

(O/L வகுப்புகளுக்கு தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்)

O/L பிரிவு 5 (8.30 - 2 00)

ஆரம்பம்: 16-5-1994 காலை 8.30

- தனித்துவம் வாய்ந்த ஆசிரியர் குழுவின் ஒருங்கிணைந்த சேவை
- இவ்வருடம் 6 பிரிவுகள் மட்டுமே ஆரம்பிக்கப்படும்.
- அனுமதிகளை உடன் பெற்றுக் கொள்ளவும்.

(சி-9402)

---

டம் இருந்தது விண்ணப்பங்களைப் பெற்று உடன் தமக்கு அனுப்பி வைக்குமாறு வடக்குக்கிழக்கு மாகாண கல்வி அமைச்சு சகல கோட்டங்களுக்கும் பொறுப்பான பிரதிக் கல்விப் பணிப்பாளர்களுக்கும் பணித்து கடிதங்களை அனுப்பி உள்ளது.

---

## SCIENCE COLLEGE

## 96 AL

PHYSICS
திரு. ஜெயசீலன்
B.sc (Hons)

இன்று ஆரம்பம்:-
14-05-94
சனி 1.30 pm

ZOOLOGY
திரு. ஈஸ்வரதாசன்
B.Sc (Cey) DiP in Ed

இன்று ஆரம்பம்:
14-05-94
சனி 1.30 pm

(சி-9410)

---

## O/L DAY CLASSES

ஆரம்பமாகி விட்டன வாரத்தில் 4 நாட்கள் அனைத்துப்பாடங்களும் நடைபெறுகின்றன.

புதிய
உயர் கல்லூரி
ஆரியகுளம் சந்தி
யாழ்.

(சி-9385)

---

12 - 5 - 1991

## 2ம் லெப்டினன்ட் மண்டேலா
## (தனபாலசிங்கம் தமிழழகன்)

வன்னியன் ஆண்ட மண்ணின்!
வளத்தினை அழித்தொழித்து
தமிழன் தலைகளை! அவன் தன் குடிகளை...
கொலைத் தொழில் செய்திட
சிங்களப் படையது! வன்னிவிக்கிரம்!!!
என்றுபெயர்சூட்டி பெரும் எடுப்பினில் வந்தபோது
தடுத்திட பாய்ந்த வேங்கைகள் அணியினில்...
சென்றது கேட்டோம் வென்றதும் அறிந்தோம்
ஆனாலும் தமிழ்... இதுவரை உன்முகம்...
காணாது தவிக்கின்றோம்
விடுதலைக்காய் - நீ வித்தாக
விதைக்கப்பட்டாய் என்பதால்!

உன்பிரிவால் துயருறும்
-குடும்பத்தினர்

ஆறுகால்மடம்
ஆனைக்கோட்டை

(சி-9409)

---

## 5-ம் ஆண்டு நினைவஞ்சலி



### கப்டன் கில்மன்
### (கிருஷ்ணசாமி இராஜச்சந்திரன்)

தாயின் மடியில்: 1965-07-12
தாயக மண்ணில்: 1989-05-14

விடுதலை என்னும் போர் கொடி தூக்கி
துணிவுடன் புறப்பட்டான் போர்க்களம் நோக்கி
உறுதியுடன் போராடி அரக்கரை அழித்து
மிருசுவில் என்னும் நன்னகரில் முத்தாய் பதித்தான்.

மீசாலை கிழக்கு,
மீசாலை.

- குடும்பத்தினர்.

(8260)

---

## சலமோன் லோறன்ஸ்

எங்களின் குடும்ப ஒளிவிளக்கே! அன்பினைப் பொழிந்து அறிவினைப் புகட்டி இன்ப வாழ்விற்கு வழி காட்டிய எங்கள் இதய தெய்வமே! நீங்கள் எம்மை விட்டுப் பிரிந்தாலும் உங்கள் நினைவு என்றும் மாறாது. ஐந்தாண்டு என்ன எத்தனை ஆண்டுகள் போனாலும் உங்கள் நினைவு எம்நெஞ்சை விட்டு என்றும் நீங்கா.

உங்கள் பிரிவால் துயருறும்,
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், உற்றார்,
உறவினர்

ஏ. ஜே எம்.
147, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.

(8269)

---

## ஓராண்டு நினைவஞ்சலி



### அமரர் கணபதிப்பிள்ளை வல்லிபுரம்

(உரிமையாளர் சிவலிங்கம் மில், பிரபல வர்த்தகர்)

பூவுலகில்: 26-01-1926 விண்ணுலகில்: 25-04-1993

திதி: 14 - 05 - 1994

எங்கள் குலவிளக்காய், குடும்பத்தின் ஒளிச்சுடராய் ஒளிவீசி, எங்களையெல்லாம் மீளாத்துயரில் ஆழ்த்தி விட்டு சிவபதமடைந்த உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றோம்.

சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

''வேலகம்''
குருக்கட்டு,
கரணவாய் தெற்கு,
கரவெட்டி,

திருமதி தெய்வானை வல்லிபுரம்
(மனைவி)
வ. சிவலிங்கம் (மகன்)

(8264)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

இராமநாதன் நுண்கலைக்கழகம்

# இசை விழா

**13.05.94** தொடக்கம் **15.05.94** வரை

(மூன்று தினங்கள்)

**கைலாசபதி கலை அரங்கம்**

அன்புடன் அழைக்கின்றோம்

இரண்டாம் நாள் நிகழ்வுகள்

**14-05-94** - சனி

**காலை**

*மங்கல விளக்கேற்றல்*

Dr. சபா ஜெயராஜா (தலைவர் இ. நுண்கலைத்துறை)

**9.00 - 10 00 மணி**

| | | |
|---|---|---|
| ராதிகா சுப்பிரமணியம் | — | பாட்டு |
| R. S. கேசவமூர்த்தி | — | வயலின் |
| K. கண்ணதாஸன் | — | மிருதங்கம் |

**10.00 - 11.00 மணி**

| | | |
|---|---|---|
| பொன்ஸ்ரீ வாமதேவன் | — | பாட்டு |
| R. ராதாகிருஷ்ணன் | — | வயலின் |
| M. சிதம்பரநாதன் | — | மிருதங்கம் |

**11.00 - 12.00 மணி**

| | | |
|---|---|---|
| சாரதா சச்சிதானந்தம் | — | பாட்டு |
| S கோபிதாஸ் | — | வயலின் |
| M. சிதம்பரநாதன் | — | மிருதங்கம் |

**மாலை**

*மங்கல விளக்கேற்றல்*

விஞ்ஞான பீடாதிபதி பேராசிரியர் S மகேஸ்வரன்

**4.00 - 5.00 மணி**

| | | |
|---|---|---|
| M. ஸ்ரீரங்கநாதன் | — | பாட்டு |
| S. வெங்கடேஸ்வரசர்மா | — | வயலின் |
| S. பாலச்சந்திர சர்மா | — | மிருதங்கம் |

**5.00 - 6.30 மணி**

| | | |
|---|---|---|
| K. ராமநாதன் | — | பாட்டு |
| S. சர்வேஸ்வரசர்மா | — | வயலின் |
| S நாகராஜன் | — | மிருதங்கம் |
| சதா வேல்மாறன் | — | கடம் |

**6.30 - 8.00 மணி**

| | | |
|---|---|---|
| பொன் சுந்தரலிங்கம் | — | பாட்டு |
| R. ராதாகிருஷ்ணன் | — | வயலின் |
| S. மகேந்திரன் | — | மிருதங்கம் |
| S. துரைராஜா | — | கஞ்சிரா |
| சதாவேல்மாறன் | — | கடம் |

வாழ்த்துவோர்:


பிரேமதாசா கொலை தொடர்பாக

# கைதான நால்வரையும் விடுவிக்குமாறு உத்தரவு

(கொழும்பு)

சிறிலங்காவின் முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசா கொலை தொடர்பாகக் கைதுசெய்யப்பட்ட சில சந்தேக நபர்களுக்கு எதிராக போதிய சாட்சியங்கள் இல்லாமையால் அவர்களைத் தடுப்புக்காவலில் வைத்திருப்பதற்கு அவசியம் இல்லையெனக்கூறி சட்டமா அதிபர் அவர்கள் மீதான தடுப்புக் காவல் உத்தரவை ரத்துச் செய்துள்ளார் என்று மேற்படி கொலை வழக்கை விசாரிக்கும் கொழும்பு மேல்நீதிமன்ற நீதவான் கூறியுள்ளார்.

இதைத் தொடர்ந்து சிரேஷ்ட அரச வழக்கறிஞர் இது குறித்து பதிலளிக்கையில் இவ்வாறான அறிக்கைகளைத் தொடர்ந்து விடுதலை செய்யப்பட்ட சந்தேக நபர்களுக்கு எதிராக சட்டமா அதிபர் உரிய நடவடிக்கை எடுப்பார் எனக் கூறினார்

அவர் மேலும் தெரிவிக்கையில்; வீரகுமாரின் நெருங்கிய சகா ஒருவரை நாம் கைது செய்துள்ளோம். இந்திகா என அழைக்கப்படும் அச் சந்தேக நபர் வழங்கிய தகவல்களின் டி சந்தேக நபர்களின் இருப்பிடங்களைக் கண்டறிவதில் நாம் ஈடுபட்டுள்ளோம் எனக் கூறினார்.

இதனைத் தொடர்ந்து விடுதலை செய்யப்பட்ட நான்கு சந்தேக நபர்களும் யூன் 15-ம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

பொது நிர்வாக அமைச்சு

## 3 ஆட்சேர்ப்பு பரீட்சைகள் விரைவில் நடத்த திட்டம்

(கொழும்பு)

சிறிலங்கா நிர்வாகசேவை, எழுதுவினைஞர் சேவை மற்றும் அதற்குச் சமமான சேவைகளுக்கான வெற்றிடங்களை நிரப்ப வருடம் மூன்று பரீட்சைகளை நடத்தப் பொது நிர்வாக அமைச்சு திட்டமிட்டுள்ளது.

பரீட்சைக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டு மூன்றரை மாதங்களுக்கிடையில் பரீட்சை வைக்கப்படும் என்றும், பரீட்சை முடிந்து மூன்று கிழமைகளுக்கிடையில் பெறுபேறுகள் அறிவிக்கப்படும் என்றும் பொது நிர்வாக அமைச்சுப் பேச்சாளர் தெரிவித்தார். புதிய திட்டத்துக்கு அமையப் பரீட்சைகளை நடத்த பரீட்சைத் திணைக்களம் விருப்பம் தெரிவித்திருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதன் பிரகாரம் எழுதுவினைஞர் சேவை மற்றும் அதற்குச் சமமான சேவைகளுக்கு மே 20இல் விண்ணப்பங்கள்கோரப்பட்டு, ஆகஸ்ட் 25இல் பரீட்சை நடைபெறவுள்ளது.

## பிரேமாவின் உருவச்சிலை மலசலகுழிமேல் உள்ளதாம்

(கொழும்பு)

முன்னாள் மறைந்த ஜனாதிபதி ஆர். பிரேமதசாவின் உருவச்சிலை மலசலகூடக்குழி ஒன்றின் மேல்நிர்மாணிக்கப்பட்டுள்ளதாக "இரு" பத்திரிகை தெரிவித்துள்ளது.

கொழும்பு செபஸ்தியன் யேட்டு தெருவில் நிர்மாணிக்கப்பட்ட மேற்படி சிலை மே தினத்தன்று திறந்து வைக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. மேற்படி சிலையே இவ்வாறு நிர்மாணிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

வீடமைப்பு நிர்மாணதுறை காரியாலயத்தின் மலசலகூடத்தின் குழியின் மேலே இது அமைக்கப்பட்டுள்ளதாக மேலும் அச்செய்தி தெரிவிக்கிறது.

## தட்டச்சுப் பயிற்சி

(பருத்தித்துறை)

கல்வித் திணைக்கள முறைசாராக்கல்விப்பிரிவு பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையில் பாடசாலையை விட்டு வெளியேறிய மாணவர்களுக்கான ஆங்கில சுருக்கெழுத்து, தட்டச்சுப் பயிற்சிகளையும் தமிழ் சுருக்கெழுத்து, தட்டச்சுப் பயிற்சிநெறிகளையும் ஆரம்பிக்கவுள்ளது. (25)

## மாகாணசபைக்கு அதிகாரம் உறுதிப்படுத்த வற்புறுத்து

மாகாண சபைகளுக்குள்ள அதிகாரங்களை உறுதிப்படுத்துமாறு கோரி வெகு விரைவில் நீதிமன்றம் செல்ல விருப்பதாக தென்மாகாண சபை முதலமைச்சர் அமரசிறி தொடங்கொட தெரிவித்துள்ளார். அண்மையில் தென் பகுதியில் நடைபெற்ற மாகாணசபைத்தேர்தல்களின் போது பொதுஜன ஐ. தே. முன்னணிக்கு மக்கள் வாக்களித்தமைக்கு நன்றி தெரிவிக்கும் கூட்டமொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய அவர்;

மாகாணசபைத் தேர்தல்களின் போது மாகாண சபைகளுக்கு அளிக்கப்பட்ட அதிகாரங்களுக்கு அமைய பொலிஸ் நிர்வாகம் மாகாண சபை அதிகாரத்திற்கு உட்பட்டதாகும். ஆனால் அதற்கு முரணாக பொலிஸ்மா அதிபரால் தனது அனுமதியின்றி தென்மாகாணசபை காலி, மாத்தறைஆகியன இருபொலிஸ்மா அதிபர் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. இது தொடர்பாக தாம் நீதிமன்றம் செல்லவுள்ளதாக மேலும் தெரிவித்தார்.

## ஆய்வரங்கம்

தமிழ்க் கதைஞர் (வட்டம்) நடாத்தும் பரிசுக் கதைகள் தொகுதி இரண்டின் ஆய்வரங்கம் நாளை பிற்பகல் 3. 30 மணிக்கு யாழ். ஆரியகுளம் சந்தி தமிழ் எழுத்தாளர் ஒன்றிய மண்டபத்தில் நடைபெறும்.

தகவம் தலைவர் திரு. வ இராசையா தலைமையில் ஆய்வரங்கு இடம்பெறும்.

ஆய்வுரைகளை கலாநிதி நா. சுப்பிரமணியன், திரு சோ. பத்மநாதன், திருமதி மனோன்மணி சண்முகதாஸ் ஆகியோர் நிகழ்த்துவர்.


தெல்லிப்பளை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்

(வரையறுக்கப்பட்டது)

# கிளைக்குழுத் தேர்தல் - 1994

கிளைகளின் விபரம்

| கிளை இல. | | கிளையின் பெயர் | கிளை இல. | | கிளையின் பெயர் |
|---|---|---|---|---|---|
| 01 | - | தெல்லிப்பளை | 23 | - | பலாலி கிழக்கு |
| 02 | - | துர்க்காபுரம் | 24 | - | மயிலிட்டிக் கரை |
| 03 | - | வவுணாவத்தை | 25 | - | மயிலிட்டி கிழக்கு |
| 04 | - | விராங்கொடை | 26 | - | மயிலிட்டி வடக்கு |
| 05 | - | பன்னாலை | 27 | - | காங்கேசன்துறை |
| 06 | - | விழிசிட்டி | 28 | - | பளை வீமன்காமம் |
| 07 | - | கருகம்பனை | 29 | - | வீமன்காமம் |

வாழ்த்துவோர்:

'ராஜன் இசையகம்'

இசைக்கருவி திருத்தகம்

142, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்,

(சி-9416)

**LONDON ACCOUNTANCY**

CLASSES NOV DEC 1994

C. I. M. A - Stage - I
A. A. T - Inter
I. A. B - Found

புதிய பிரிவுகள் ஆரம்பமாகிவிட்டன.

விபரங்களுக்கு:

***NORTH CEYLON TECHNICAL INSTITUTE***

14, ST. PETER'S LANE, JAFFNA.

(சி-9417)

***JAFFNA COLLEGE***

INTER HOUSE ATHLETIC MEET

will be held on

**Saturday 14th at 2 30 p.m**

at Bicknell Stadium

Chief Guests

**Dr. & Mrs. W. T. Jeyakularajah**

Alumni, Parents and Friends are cordially invited.

G. RAJANAYAGAM
Principal

(சி-9412)

## கட்சியின் தலைமை ஏற்பதற்கு காரணம்

### சிறிமணி அத்துலத் முதலி விளக்கம்

(கொழும்பு)

மறைந்த தனது கணவனின் அபிலாஷைகளை நிறைவேற்றும் முகமாகவே தான் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் தலைமை பதவியை ஏற்றதாக சிறிமணி அத்துலத் முதலி தெரிவித்துள்ளார்.

பத்திரிகைகளுக்கு நேற்று அவர் விடுத்த செய்தியில் இவ்வாறு தெரிவித்துள்ளார். லலித் அத்துலத் முதலியின் மறைவை தொடர்ந்து கட்சி தலைமையை ஏற்ற காமினி திசாநாயக்கா பதவி ஆசைக்காகவும் ஏனைய சுகபோகங்களுக்காகவும் ஐ. தே. கட்சியுடன் இணைந்ததாகவும் ஆனால் அதன் பின்னர் நடைபெற்ற தென் மாகாணசபை தேர்தலில் தமது அணியை சேர்ந்த நான்கு உறுப்பினர் தெரிவு செய்யப்பட்டனர் எனவும் இதிலிருந்து மக்களின் ஆதரவு தன்பக்கம் உள்ளது என்பது புலனாவதாகவும் திருமதி அத்துலத்முதலி தெரிவித்தார்.

## பிரேமா சிலை எழுப்ப அலுவலகம் தரைமட்டம்

### எதிர்த்து சட்டத்தரணி மனுத்தாக்கல்

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசாவின் சிலையை எழுப்புவதற்காக தாம் தொழில் நடத்திவந்த அலுவலகத்தை நகர அபிவிருத்தி அதிகாரசபை தரைமட்டமாக்கியதால் தமக்கு பெருமளவு நஷ்டம் ஏற்பட்டதாக கூறி ஒன்றரைக்கோடி ரூபாவை நஷ்டஈடாக கேட்டு அளுத்கடை சட்டத்தரணி ஒருவர் வழக்கு தொடர்ந்துள்ளார்.

அவர் தொடர்ந்த அடிப்படை உரிமை மீறல் வழக்கை நீதிமன்று விசாரணைக்கு எடுத்துக்கொண்டுள்ளது. மனுதாரர் தனது மனுவில் நகர அபிவிருத்தி அதிகாரசபை, இச்சபையின் காணி மற்றும் சொத்துடைமைக்கான மேலதிக செயலாளர் நாயகம், சட்டமா அதிபர் ஆகியோரை பிரதிவாதிகளாக குறிப்பிட்டுள்ளார்.

## முதலமைச்சர் பதவியை துறந்திட மாட்டேன்

### - மத்திய மாகாண முதலமைச்சர்

(கொழும்பு)

''மத்திய மாகாண முதலமைச்சர் பதவியை துறந்து வேறு பதவிகளை ஏற்கும் எண்ணம் எனக்கு கிடையாது'' இவ்வாறு மத்திய மாகாண முதலமைச்சர் திஸநாயக்கா தெரிவித்துள்ளார்.

சப்பிரகமுவா மாகாண ஆளுநராக தான் நியமிக்கப்பட்டுள்ளதாக அடிபடும் செய்திகளில் எந்தவித உண்மையும் இல்லையென அவர் தெரிவித்துள்ளார். ஆளுநர் பதவியை ஏற்கும் எண்ணமோ அல்லது வேறு பதவிகளை ஏற்று கட்சியைவிட்டு வெளியேறும் எண்ணமோ எனக்கு இல்லை எந்தவொரு பதவி பற்றியும் எவரும் என்னிடம் பேசவில்லை இது போன்ற எதிர்பார்ப்பும் எனக்கு கிடையாது நான் ஆளுநராக நியமிக்கப்படலாமென பத்திரிகையில் செய்தி வெளியாகியுள்ளது இதுபற்றி பலரும் என்னைக் கேட்டனர் எனவே அவ்வாறான எண்ணம் எனக்கு கிடையாது என அவர் விடுத்துள்ள பத்திரிகை குறிப்பொன்றில் தெரிவித்துள்ளார்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 08 | - | இளவாலை | 30 | - | தையிட்டி |
| 09 | - | கீரிமலை | 31 | - | ஊறணி |
| 10 | - | சீமெந்துத் தொழிற்சாலை முன்பாக (காங்கேசன்துறை) | 32 | - | பலாலிச் சந்தி |
| 11 | - | நடேஸ்வரா கல்லூரி அருகாமை (காங்கேசன்துறை) | 33 | - | மடத்தடி |
| 12 | - | மாவிட்டபுரம் | 34 | - | அரசினர் வைத்தியசாலை அருகாமை (தெல்லிப்பளை) |
| 13 | - | அரசடி வீதி, மாவிட்டபுரம் | 35 | - | கலட்டி |
| 14 | - | கொல்லங்கலட்டி | 36 | - | வசந்தபுரம் |
| 15 | - | வறுத்தலைவிளான் | 37 | - | ஊரங்குணை |
| 16 | - | கட்டுவன் | 38 | - | மாங்கொல்லை |
| 17 | - | குரும்பசிட்டி | 39 | - | குட்டியப்புலம் |
| 18 | - | வசாவிளான் | 40 | - | குரும்பசிட்டி கிழக்கு |
| 19 | - | ஒட்டகப்புலம் | 41 | - | கிளானை |
| 20 | - | வசாவிளான் சந்தி | 42 | - | திருப்பூர், மயிலிட்டி |
| 21 | - | பலாலி மேற்கு | 43 | - | சீந்திப்பந்தல் |
| 22 | - | பலாலி மத்தி | 44 | - | மயிலங்கூடல் |

நியமனப் பத்திர ம்ஏற்றுக் கொள்ளும் இகதி : 21-05-1994 சனிக்கிழமை

நேரம் : காலை 9.00 மணி தொடக்கம் காலை 10.00 மணி வரை

நியமனப் பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளும் இடம் :

சகல கிளைகளுக்கான (01 தொடக்கம் 44 வரை) நியமனப் பத்திரங்கள் ''யா ) மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை'' உடுவில் வீதி, மானிப்பாயில் ஏற்றுக் கொள்ளப்படும்.

அபேட்சகர் நியமனங்களில் ஆட்சேபனை எதுவும் இருப்பின் அன்றைய தினம் காலை 10.00 மணிதொடக்கம் காலை 11.00 மணிக்கிடையில் தேர்தல் | உதவித் தேர்தல் உத்தியோகத்தரிடம் எழுத்து மூலமாக ஒப்படைத்தல் வேண்டும்.

**தேர்தல் இருப்பின் தேர்தலும் வாக்களிப்பும்**

**28 05.1994 சனிக்கிழமை**

**நேரம் ! காலை 9.00 மணி தொடக்கம் பிற்பகல் 4.0ம மணிவரை**

**இடம் : யா/மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை, உடுவில் வீதி, மானிப்பாய்.**

குறிப்பு: நியமனப் பத்திரங்கள் 14 05 1994 தொடக்கம் சகல விற்பனை நிலையங்களிலும், நிவாரணக் கிளைகளிலும், தலைமைக் காரியாலயத்திலும் பணத்தைச் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.

பிரதேசச் செயலகம்,
வலி. வடக்கு,
தெல்லிப்பளை.
09-05-1994

எ. சின்னத்தம்பி
தேர்தல் உத்தியோகத்தர்

(சி-9404)

நல்லூர் பிரதேச நூலகம்
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

**சிந்தனைக்கு**

கயமை உறங்கும் இடத்தை
கயமை அறியும்.

-- ஆபிரிக்க பழமொழி

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 14-05-1994
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2839 நிர்வாகபீடம் 2024
தபால் பெட்டி எண் - 05

## பாதாள உலக மன்னர்கள் யார்?

பாதாள உலக மன்னர், பல கொலைகளின் சூத்திரதாரி எனத் தேடப்பட்டுவந்த சொத்தி உபாலி சிறிலங்கா பொலிசாரால் மிக விரைவிலேயே கைது செய்யப்பட்டுள்ளான் பெரும் கிரிமினல் என வர்ணிக்கப்பட்ட சொத்தி உபாலி சாதாரணமாகப் பத்திரிகை வாங்க கடைக்குச் செல்லும்போது எதுவித எதிர்ப்பும் இன்றி கைது செய்யப்பட்டதாகக் கூறப்படுகின்றது.

சொத்தி உபாலியைக் கைது செய்யுமாறு இரு தினங்களுக்கு முன்னர் தான் நீதிமன்றம் உத்தரவு இட்டிருந்தது; இதேசமயம் ஜனாதிபதி டி, பி விஜேதுங்காவும் உபாலியைக் கைது செய்யுமாறு விசேட பணிப்புரை விடுத்திருந்தார் இந்நிலையில், நீதிமன்ற அறிவிப்பு வெளியாகி 36 மணி நேரத்திற்குள் சொத்தி உபாலி கைது செய்யப்பட்டுள்ளான்

இதனைப் பார்க்கும்போது சொத்தி உபாலி பாதாள உலக மன்னன்தானா? பல கொலைகளை திட்டமிட்டுச் செய்த சூத்திரதாரிதானா? சொத்தி உபாலியின் பின்னே பெரியதொரு கொலைப்படை உள்ளதா? சொத்தி உபாலியிடம் சட்டவிரோத ஆயுதங்கள் கொட்டிக் கிடக்கின்றனவா? என்ற கேள்விகள் எழுவது தவிர்க்க முடியாதவை.

ஏனெனில் பொலிசார் கூறுவது போன்று மேலே உள்ள தகுதிகள் யாவும் சொத்தி உபாலியிடம் இருக்குமானால், அவரை இவ்வளவு இலகுவாக, இவ்வளவு குறுகிய காலத்திற்குள் எதுவித எதிர்ப்பும் இன்றி சிறிலங்கா பொலிசாரினால் கைது செய்திருக்கமுடிந்திருக்குமா? அவ்வாறு கைது செய்யும் ஆற்றல் சிறிலங்கா பொலிசாருக்கு இருக்குமானால், சொத்தி உபாலி மட்டுமல்ல, முன்னாள் பிரதிபொலிஸ் மா அதிபரான உடுகம்பொலவை நீதிமன்றம் கைது செய்ய உத்தரவிட்ட வேளை அவரை வருடக் கணக்கில் தேடி இருக்காது; சில தினங்களிலேயே கைது செய்திருக்க முடியும்.

ஆகையினால், இதன் மூலம் தெரியவருவது ஒன்றே. சொத்தி உபாலி போன்றவர்களை பாதாள உலக மன்னர்களாக ஆக்கியவர்களும், உடுகம்பொல போன்றவர்களைக் கைது செய்யப்படாமலும் காப்பாற்றியவர்களும்

# நீதித்துறையின் படிமுறை வளர்ச்சியில்

தமிழீழத்தில் நீதிமன்றுகள் ஆரம்பிக்கப்பட்டு சொற்ப காலத்திலேயே அவை உலகின் பல பாகங்களிலும் உள்ள மக்களால் பாராட்டுக்களைப் பெற்றுள்ளன ஏன் எதிரிகளும் கூட பாராட்டியுள்ளார்கள். அண்மையில் சிறிலங்கா பாராளுமன்றத்தில் பேசிய உறுப்பினர் ஒருவர் ''விடுதலைப் புலிகளின் நீதிமன்றுகளில் ஊழல் இல்லை, வழக்குகள் தாமதம் இல்லை'' என்று கூறியுள்ளார் இந்நபர் தமிழர் விடுதலைக் கூட்டணி யாழ் மாவட்ட பாராளுமன்ற அங்கத்தவராக இருந்தாலும் தமிழர்களின் விடுதலைப் போராட்டத்திற்கு எதிராக சிங்கள அரசுக்கு ஆயுதம் ஏந்தி ஒத்துழைப்பு வழங்கும் குழுவைச் சேர்ந்தவர். அவர் தமிழீழ நீதிமன்றுகளை புகழ்வது போல் தோன்றினாலும் உண்மையில் சிங்களவர்கள் ஏன் தங்களது நீதிமன்றுகளை சிறப்பான நிலையில் கொண்டு நடத்தவில்லை என்று ஆதங்கப்படுகிறார் என்பது தெட்டத் தெளிவாக விளங்குகிறது.

தமிழீழத்தில் நீதி நிர்வாகம் ஓர் உயர்ந்த சிறப்பான முறையில் வளர்ச்சியடைந்து வருகிறது என்பது உண்மை. அதன் கட்டம் கட்டமான படிமுறை வளர்ச்சி நீதிமன்றுகளில் கடைப்பிடிக்கப்படும் ஒழுங்கு, சிறப்பாக அமைந்த தரமான விவாதங்கள், நீதியாளர்களால் அளிக்கப்படும் தீர்ப்புகள் போன்றவற்றிலிருந்தும், தீர்ப்புகள் நடைமுறைப்படுத்தப்படும் விதத்திலும், தீர்ப்புகள் திருப்தியடையாதவர்கள் மேல்முறையீடு செய்வதற்கு உருவாக்கப்பட்ட மேன்முறையீட்டு நீதிமன்ற அமைப்பு மூலமும் கண்டு கொள்ளலாம்.

### பிஸ்கால் சேவை

குடியியல் வழக்குகளில் புதிய நீதிமன்றுகளால் வழங்கப்படும் தீர்ப்புகளை நடைமுறைப்படுத்துவதற்கு காவல் துறையினரை உபயோகிப்பது அடிப்படை மனித உரிமை குற்றச்சாட்டுகளுக்கு இடமளிக்கும் என்ற காரணத்தால் சமீபத்தில் பிஸ்கால் அமைப்பு ஒன்றை நீதி நிர்வாகத்துறையினர் உருவாக்கியுள்ளனர். ஒவ்வொரு தமிழீழ மாவட்ட நீதிமன்றின் பதிவாளர் தீர்ப்புகளை நடைமுறைப்படுத்தி அமுலாக்கும் பணியைப் புரியும் போது பிஸ்கால் அலுவலர் என அழைக்கப்படுவார் நர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர் இவர்களுக்கான பயிற்சி வழங்கப்பட்டு வெவ்வேறு நீதிமன்றுகளில் அவர்கள் கடமையில் ஈடுபட்டுள்ளனர்.

### திருத்தச் சட்டம்

நீதி நிர்வாகத் துறையின் நடவடிக்கைகள் இவற்றுடன் நின்று விடாது தமிழீழத்தின் பொருளாதார சமூக வளர்ச்சிகளுக்கு ஏற்பவும் சட்டத்துறை உலகளாவிய ரீதியில் வளர்ச்சியடைந்து வரும் பாங்குகளுக்கு முகம் கொடுக்கும் வகையிலும் புதிய சட்டங்களையும் காலத்துக்குக் காலம் பிறப்பித்துக் கொண்டு வருகிறது. அவையெல்லாம் தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரன் அவர்களின் ஒப்புதல் அடிப்படையிலேயே வரையப்படுகின்றன. குடியியல் வழக்குகளில் நீதி வழங்கப்படுவது தாமதமாகக் கூடாது என்றகாரணத்தால்ஏற்கனவே நடைமுறையிலிருந்த தெளிவுரை, வழக்கெழு வினாக்கள் எழுப்புதல், சாட்சிகளை நெறிப்படுத்தல் போன்ற கட்டங்களுக்கு இடையிலான கால இடைவெளிகள் குறைக்கப்பட்டு விசாரணைகளைத் துரிதப்படுத்துவதற்காக குடியியல் நடைமுறைச் சட்டங்களில் திருத்தங்கள் கொண்டு வரப்பட்டுள்ளது குடியியல் வழக்குகளில் வசதி உரிமைகள் தொடர்பான வழக்குகள், குத்தகை தொடர்பான வழக்குகள் ஆதனங்களின்எல்லைப் பிணக்குகள் தொடர்பான வழக்குகள் என்பனவற்றிற்கு நிவாரணநிதி குறைக்கப்பட்டுள்ளது தொழில் பிணக்குகள் சம்பந்தமாக வரைவிலக்கணங்களும் புதிய நடவடிக்கைகளும் புகுத்தப்பட்டுள்ளன. இவையாவும் 1994-ம் ஆண்டு மே மாதம் 01-ம் திகதி முதல் நடைமுறைக்கு வந்துள்ளன.

### தொழில் நடைமுறை

தமிழீழத்தில் ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் பல தொழிற்சாலைகளிலும் நிறுவனங்களிலும் கடமைபுரிகிறார்கள். அவர்களுக்கு பல பிரச்சினைகள் உள்ளன. பல வழிகளாலும் அவர்கள் சுரண்டப்படுகிறார்கள் தொழில் நிச்சயமற்றதாகவும் ஊதியங்கள் சரிவரவழங்கப்படாமலும் உள்ளது. சட்டப்படியான கொடுப்பனவுகள் கூட அவர்களுக்கு வழங்கப்படுவதில்லை. உதாரணமாக ஊழியர் சேமலாப நிதிப்பணம்நம்பிக்கை நிதியப் பணம் ஆகியன செலுத்தப் மாதா மாதம் கழிக்கப்பட்டாலும் உரிய இடங்களுக்கு அப்பணங்கள் அனுப்பப்படாமையால் தொழிலாளர்கள் அவற்றைப்பெற முடியாதும் போய் விடுகிறது. இக்குறைபாடுகளை நீக்கவும் தொழிலாளர்கள் நிவாரணம் பெறக்கூடிய விதத்திலும் ஏற்கனவே தமிழீழ சட்டக் கோவையில் தொழில் நடைமுறைச்சட்ட விதிகள் உருவாக்கப் பட்டுள்ளனவேயாயினும் சில ஐயப்பாடுகளை பாவித்து தொழில் கொள்வோர் தப்ப எத்தனிப்பதால் சர்வதேச தொழில் சட்டங்களின் வரையறிக்கைகளுக்குஅமைய அண்மையில் வெளிவந்த திருத்தச் சட்டத்தால் புதிய வரைவிலக்கணங்களும் நடைமுறைகளும் புகுத்தப்பட்டுள்ளன.

### வரைவிலக்கணம்

சில சந்தர்ப்பங்களில் வேலை கொள்பவர்கள் வடகிழக்குப் பகுதிகளில் இயங்கும் தொழில் ஸ்தாபனங்கள் வரையறுக்கப்பட்டவை, தலைமைக் காரியாயலத்தை கொழும்பில் கொண்டவை, இங்கு இருப்பது கிளைதான் என்றெல்லாம் விதண்டா வாதத்தில் ஈடுபடுகிறார்கள் இதற்காகவே புதிய திருத்தச்சட்டத்தில் வேலை கொள்பவர் என்றால் யார் என்ற வரைவிலக்கணமும் தொழிலாளி என்றால்

**ச. தியாகராசா**

யார்என்றவரைவிலக்கணமும் வேலைகொள்பவர்யார்என்று கண்டு பிடிப்பதற்கான வழிவகைகளும் தெளிவாகக் கூறப்பட்டுள்ளன. ''வேலை கொள்வோர்'' என்றால் இன்னொருவரை வேலைக்கமர்த்துபவரும், இன்னொருவருக்காக இன்னொருவரை வேலைக்கமர்த்துபவரும் வேலை கொள்பவராக கருதப்படுவர். கம்பனி என்றால் ஒவ்வொரு இயக்குனரும் பிரதான அலுவலரும் (உதாரணம் பொது முகாமையாளர்) பங்குடமை வியாபாரமானால் ஒவ்வொரு பங்காளியும் இவ்வரைவிலக்கணத்துக்குள்ளாவார். ''தொழிலாளி'' என்றால் ஒரு வேலை கொள்பவரின் கீழ் மறைமுகமான அல்லது நேரடியான அல்லது வாய்மூலமான அல்லது எழுத்து மூலமான ஒப்பந்தத்தின் அடிப்படையில தொழில் புரிபவரா

### மேன் முறையீடு

புதிய திருத்தச் சட்டத்தின் கீழ் தொழில் நீதிமன்று தீர்ப்பு வழங்கிய பின்னர் அத்தீர்ப்பில் திருப்தியடையாத கட்சிக்காரர்கள் மேன்முறையீடு செய்யலாம் என்றும் அதற்கான வழி வகைகளும், தீர்ப்புகளை உதாசீனம் செய்யும் தொழில் கொள்பவர்களுக்கு எதிராக தீர்ப்பை அமுலாக்குவதற்கு எடுக்கப்படும் நடவடிக்கைகளும் வழி வகைகளும் புதிதாக சேர்க்கப்பட்டுள்ளன உதாரணத்துக்கு ஒரு தீர்ப்பில் தொழிலாளிக்கு வேலையை திரும்பக் கொடுக்குமாறும் அத்துடன் அவர் வேலையில்லாதிருந்த காலத்துக்கு வேதனமும்வழங்கப்படவேண்டுமென்றதிலிருந்து அத்தீர்ப்புக்குஎதிராகவேலைகொள்பவர் மேன்முறையீடு செய்ய விரும்பினால் திரும்பவும் வேலை வழங்குவதற்குப் பதிலாக பன்னிரண்டு மாதச் சம்பளத்தையும் வழங்கப்படவேண்டும் என்று சொல்லப்பட்ட நின்ற காலவேதனத்தையும் சேர்த்து மன்றின் பதிவாளரிடம் செலுத்தி பற்றுச்சீட்டுப் பெற்று அப்பற்றுச்சீட்டை தன் மேன்முறையீட்டு விண்ணப்பத்துடன் அணைத்து தீர்ப்பு வழங்கப்பட்ட பதினான்கு நாட்களுக்குள் நிவாரண வரியான ரூபாஆயிரத்தையும் செலுத்தி மேன்முறையீடு செய்யலாம் மேன்முறையீட்டு நீதிமன்று அத்தகைய விண்ணப்பங்களை ஆறுமாத காலத்திற்குள் விசாரித்துத் தீர்ப்பு வழங்கும்

### அமுலாக்கம்

தொழில் நீதிமன்ற தீர்ப்புகளை நடைமுறைப்படுத்தும் வகையில் அமைந்துள்ள புதிய திருத்தச்சட்டம் பின்வருமாறு கூறுகிறது:

தொழில் நீதிமன்றினால் அல்லது மேல் முறையீட்டு நீதிமன்றினால் வழங்கப்பட்ட தீர்ப்புகளை குறிக்கப்பட்ட காலத்துக்குள் வேலை கொள்பவர் நிறைவேற்றத்தவறினால் விண்ணப்பதாரர் அது பற்றி அண்மையில் உள்ள தமிழீழ மாவட்ட நீதிமன்றுக்கு தீர்ப்பின் பிரதியுடன் விண்ணப்பிக்கும் பட்சத்தில் அம்மன்று வேலை கொள்பவரை மன்றுக்கு அழைத்து விசாரணை ஏதுமின்றி தீர்ப்பில் வழங்கப்பட்ட நிவாரணங்களை அமுலாக்கும்படி கட்டளையிடும் அக்கட்டளையை வேலை கொள்பவர் நிறைவேற்றத் தவறினால் மாவட்ட நீதிமன்று குற்ற அபராதப்பணத்தை வசூலிப்பது போல நிவா

## தடகளப் போட்டி

யாழ் தம்பாட்டி அ.த.க பாடசாலையும், யாழ் நாரந்தனை கணேச வித்தியாலயமும் இணைந்து நடாத்தும் இல்லங்களுக்கிடையிலான தடகளப் போட்டி இன்று பிற்பகல் இரண்டு மணியளவில் நாவற்குழி லவனிதா குடியிருப்பில் இருக்கும் பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது இந்நிகழ்வில் ஊர்காவற்றுறை கல்விக் கோட்ட உதவிக் கல்விப்பணிப்பாளர் திரு. அ கனகசுந்தரம் பிரதம விருந்தினராகவும் திரு. எல் ஏ ஈ இரட்ணராசா, திரு. அ. நீ ஒப்பிலாமணி ஆகியோர் சிறப்புவிருந்தினர்களாகவும் கலந்து கொள்ளவுள்ளனர்.

**பிரதேசசபை**

## ஊழியர் வெற்றி

(தொல்புரம்)

வலிமேற்கு பிரதேச சபை சங்கானை உப அலுவலக ஊழியர்கட்கும் சங்கானை சிவப்பிரகாச வித்தியாசாலை ஆசிரியர்களுக்கும் இடையிலானமட்டுப்படுத்தப்பட்ட 20 ஓவர் கிரிக்கட் போட்டிகள் சங்கானை பாரதி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றன.

சங்கானை உப அலுவலக பொறுப்பதிகாரி பொ சண்முகானந்தசிவம் தலைமையில் நடைபெற்ற மேற்படி போட்டிகளில் சிவப்பிரகாச வித்தியாசாலை ஆசிரியர்குழு 9விக்கட் இழப்பிற்கு 90 ஓட்டங்களையும், உப அலுவலக ஊழியர்கள் 5 விக்கட் இழப்பிற்கு 91 ஓட்டங்களையும் பெற்று வலிமேற்கு பிரதேச சபை ஊழியர்கள் வெற்றியீட்டினர்.

(41)

## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

1994.05 14 . - சனி இரவு

08. 01- அறிவியற்கலசம்
08. 10- தாயகப்பாடல்கள்
08. 25- நேயர் கடிதங்கள்
08. 30- செய்திகள்
08. 40- சித்திரம் ''சீதனம்''

1994.05.15-ஞாயிறு காலை

07. 02- மாவீரவணக்கம்
07 15- களத்தில் மலர்ந்தவை
07. 30- செய்திகள்

லியிடம் சட்டவிரோத ஆயுதங்கள் கொட்டிக் கிடக்கின்றனவா? என்ற கேள்விகள் எழுவது தவிர்க்க முடியாதவை.

ஏனெனில் பொலிசார் கூறுவது போன்று மேலே உள்ள தகுதிகள் யாவும் சொத்தி உபாலியிடம் இருக்குமானால், அவரை இவ்வளவு இலகுவாக, இவ்வளவு குறுகிய காலத்திற்குள் எதுவித எதிர்ப்பும் இன்றி சிறிலங்கா பொலிசாரினால் கைது செய்திருக்கமுடிந்திருக்குமா? அவ்வாறு கைது செய்யும் ஆற்றல் சிறிலங்கா பொலிசாருக்கு இருக்குமானால், சொத்தி உபாலி மட்டுமல்ல, முன்னாள் பிரதிபொலிஸ் மா அதிபரான உடுகம்பொலவை நீதிமன்றம் கைது செய்ய உத்தரவிட்ட வேளை அவரை வருடக் கணக்கில் தேடி இருக்காது; சில தினங்களிலேயே கைது செய்திருக்க முடியும்.

ஆகையினால், இதன் மூலம் தெரியவருவது ஒன்றே. சொத்தி உபாலி போன்றவர்களை பாதாள உலக மன்னர்களாக ஆக்கியவர்களும், உடுகம்பொல போன்றவர்களைக் கைது செய்யப்படாமலும் காப்பாற்றியவர்களும் அரசியல்வாதிகள் என்பதேஆகும் அரசியல்வாதிகள் அவ்வாறு பாதுகாப்பு வழங்கிக் காப்பாற்றாது விட்டால் அவர்கள் சில தினங்களுக்குள்ளேயே கைது செய்யப்பட்டிருப்பார்கள். அதாவது, ஜனாதிபதியின் உத்தரவு கிடைத்து ஓரிரு தினங்களுக்குள் சொத்தி உபாலி கைது செய்யப்பட்டது போன்று ஏனையோரும் கைது செய்யப்பட்டிருப்பர்.

சிறு குற்றச் செயல்கள் புரிந்த சொத்தி உபாலி போன்றவர்களை, பாதாள உலகிற்கு கொண்டு சென்றவர்கள் அரசியல் வாதிகளே. ஆனால், அங்கும் அவர்கள் மன்னர்களாக இருக்கவில்லை. தொண்டர்களாககவே இருந்தார்கள் அரசியல் வாதிகளோ மன்னர்களாக இருந்தனர் இவர்கள் அரசியல்வாகளால் பாதுகாக்கப்பட்டனர் என்பதே உண்மையாகும் இதனை சொத்தி உபாலியின் கைது தொடர்பாக அமைச்சர் சிறிசேன கூரே ஜனாதிபதிக்கு விடுத்த கோரிக்கை/எச்சரிக்கையே வெளிக்காட்டப் போதுமானது. ''வன்முறைகள் மலிந்த சூழ்நிலையில் ஜனாதிபதித் தேர்தலுக்காக ஐ. தே. க. சுவரொட்டிகளை நாடு முழுவதும் ஒட்டியவர் உபாலியே என்பதனை விஜேதுங்கா புரிந்து கொள்ள வேண்டும்'' என்பதே கூரே தெரிவித்த எச்சரிக்கையாகும்.

இவ்எச்சரிக்கையானது, அமைச்சர் சிறிசேன கூரேயினால் ஏன் விடுக்கப்பட்டது என்பதைத் திட்டவட்டமாக இன்று கூறமுடியாது. இது கறை படிந்த தமது அரசியல் பற்றிய பல தகவல்களை விசாரணையின்போது உபாலி வெளியிடலாம் என்ற அச்சத்தினாலா? அல்லது உபாலியினால் ஐ தே. க. புரிந்த நீண்ட கொலைப் பட்டியல் ஒன்று வெளிவரும் என்பதினாலா? அல்லது நெருக்கடி காலத்தில் செய்த உதவியை மறக்கக் கூடாது என்பதினாலா? அதாவது, நன்றி மறக்கக் கூடாது என்பதினாலா? என்பதை தற்பொழுது உடன் கூற முடியாது.

ஆனாலும், சொத்தி உபாலி போன்ற கிரிமினல்களை வைத்துக் கொண்டு ஐ தே க. அரசாங்கம் தனது ஆட்சியை நடத்தியது என்பது மட்டும் உண்மை. தற்பொழுது தங்களுக்குள் எழுந்த முரண்பாடு காரணமாக தாமே உருவாக்கிய பாதாள உலகைத் தோண்ட முற்பட்டுள்ளனர் அங்கு உதவியவர்களைக் காட்டிக் கொடுக்கவும் இவர்கள் தயாராகி விட்டனர். அவ்வாறு இல்லாது விட்டால் 'மன்னன்' பட்டம் பெற்றபின் இவ்வாறுஅப்பாவித் தனமாய் சொத்தி உபாலி கைதாகி இருக்க மாட்டான்

செய்வதற்கு உருவாக்கப்பட்ட மேன்முறையீட்டு நீதிமன்ற அமைப்பு மூலமும் கண்டு கொள்ளலாம்.

### பிஸ்கால் சேவை

குடியியல் வழக்குகளில் புதிய நீதிமன்றுகளால் வழங்கப்படும் தீர்ப்புகளை நடைமுறைப்படுத்துவதற்கு காவல் துறையினரை உபயோகிப்பது அடிப்படை மனித உரிமை குற்றச்சாட்டுகளுக்கு இடமளிக்கும் என்ற காரணத்தால் சமீபத்தில் பிஸ்கால் அமைப்பு ஒன்றை நீதி நிர்வாகத்துறையினர் உருவாக்கியுள்ளனர். ஒவ்வொரு தமிழீழ மாவட்ட நீதிமன்றின் பதிவாளர் தீர்ப்புகளை நடைமுறைப்படுத்தி அமுலாக்கும் பணியைப் புரியும் போது பிஸ்கால் அலுவலர்என அழைக்கப்படுவார் அவருக்கு உதவும் வகையில் கட்டளைச் சேவகர்களும் எழுத்தாணை நிறைவேற்று

ணங்களும் புதிய நடவடிக்கைகளும் புகுத்தப்பட்டுள்ளன. இவையாவும் 1994-ம் ஆண்டு மே மாதம் 01-ம் திகதி முதல் நடைமுறைக்கு வந்துள்ளன.

### தொழில் நடைமுறை

தமிழீழத்தில் ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் பல தொழிற்சாலைகளிலும் நிறுவனங்களிலும் கடமைபுரிகிறார்கள். அவர்களுக்கு பல பிரச்சினைகள் உள்ளன. பல வழிகளாலும் அவர்கள் சுரண்டப்படுகிறார்கள் தொழில் நிச்சயமற்றதகவும் ஊதியங்கள் சரிவரவழங்கப்படாமலும் உள்ளது. சட்டப்படியான கொடுப்பனவுகள் கூட அவர்களுக்கு வழங்கப்படுவதில்லை. உதாரணமாக ஊழியர் சேமலாப நிதிப்பணம்நம்பிக்கை நிதியப் பணம் ஆகியன செலுத்தப் படுவதில்லை. சில இடங்களில் இப்பணங்கள் தொழிலாளர்களின் சம்பளத்திலிருந்து

கண்டு பிடிப்பதற்கான வழி வகைகளும் தெளிவாகக் கூறப் பட்டுள்ளன. ''வேலை கொள்வோர்'' என்றால் இன்னொருவரை வேலைக்கமர்த்துபவரும், இன்னொருவருக்காக இன்னொருவரை வேலைக்கமர்த்துபவரும் வேலை கொள்பவராக கருதப்படுவர். கம்பனி என்றால் ஒவ்வொரு இயக்குனரும் பிரதான அலுவலரும் (உதாரணம் பொது முகாமையாளர்) பங்குடமை வியாபாரமானால் ஒவ்வொரு பங்காளியும் இவ்வரைவிலக்கணத்துக்குள்ளாவார். ''தொழிலாளி''என்றால் ஒரு வேலை கொள்பவரின் கீழ் மறைமுகமான அல்லது நேரடியான அல்லது வாய்மூலமான அல்லது எழுத்து மூலமான ஒப்பந்தத்தின் அடிப்படையில் தொழில் புரிபவராவார். இதன் கீழ் பயிலுனர்களும், தொழில பழகுபவர்களும் உள்ளடங்குவர்

திருத்தச்சட்டம் பின்வருமாறு கூறுகிறது:

தொழில் நீதிமன்றினால் அல்லது மேல் முறையீட்டு நீதிமன்றினால் வழங்கப்பட்ட தீர்ப்புகளை குறிக்கப்பட்ட காலத்துக்குள் வேலை கொள்பவர்நிறைவேற்றத்தவறினால் விண்ணப்பதாரர் அது பற்றி அண்மையில் உள்ள தமிழீழ மாவட்ட நீதிமன்றுக்கு தீர்ப்பின் பிரதியுடன் விண்ணப்பிக்கும் பட்சத்தில் அம்மன்று வேலை கொள்பவரை மன்றுக்கு அழைத்து விசாரணை ஏதுமின்றி தீர்ப்பில் வழங்கப்பட்ட நிவாரணங்களை அமுலாக்கும்படி கட்டளையிடும் அக்கட்டளையை வேலை கொள்பவர் நிறைவேற்றத் தவறினால் மாவட்ட நீதிமன்று குற்ற அபராதப்பணத்தை வசூலிப்பது போல நிவாரணப்பணங்களை அறவிட்டு அவற்றை பின்னர் விண்ணப்பதாரருக்கு வழங்கும்.

### புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

1994.05 14 . - சனி இரவு

08. 01- அறிவியற்கலசம்
08. 10- தாயகப்பாடல்கள்
08. 25- நேயர் கடிதங்கள்
08. 30- செய்திகள்
08. 40- சித்திரம் ''சீதனம்''

1994.05.15-ஞாயிறு காலை

07. 02- மாவீரவணக்கம்
07 15- களத்தில் மலர்ந்தவை
07. 30- செய்திகள்
07. 35- பத்திரிகைச் செய்திகள்
07 40- தொடர்ந்து களத்தில் மலர்ந்தவை.

# தமிழக காங்கிரசினுள் கோஷ்டி மோதல் வெடிப்பு

காங்கிரசின் தமிழ்நாடு பிரிவில்கோஷ்டிசண்டைகள்ஆரம்பித்துள்ளன வாழப்பாடி தலைமையிலானகுழுவாகவும் தங்கபாலு தலைமையிலான குழுவாகவும்தமிழககாங்கிரஸ் பிளவுபட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது தமிழககாங்கிரஸ் பொறுப்பாளர்களை மாற்றுவது திருத்தி அமைப்பது தொடர்பான ஆய்வுகளை மேற்கொள்ள அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் மூவரடங்கிய மேலிட பார்வையாளர் குழு அண்மையில் சென்னைவந்தது

கட்சித்தொண்டர்கள் மற்றும் நிர்வாகிகள் கருத்தை கேட்பதற்காக இக்குழுவினர் காங்கிரஸ் தலைமையிடம் சத்தியமூர்த்திபவனுக்கு வந்தனர் இக்குழுவினர் சத்தியமூர்த்தி பவனுக்குள் நுழையும் போதே வெளியே கூடியிருந்த வழப்பாடி, தங்கபாலு ஆதரவாளர்களிடையே மோதல் ஏற்படாது இது வீதிச்சண்டையாகி கட்டைகளாலும் சோடா போத்தல்களாலும் ஒருவரையொருவர் தாக்கிகொள்ளும் அளவுக்கு

முற்றியது இதில் 12 க்கும் அதிகமானவர்கள் படுகாயமடைந்தனர் பொலிசார் தடியடி நடத்தி இவர்களை விரட்டியடித்தனர் அதிமுக உடன் கூட்டணி வைத்துக் கொள்ள முயற்சிக்கும் தங்கபாலு கோஷ்டியினரை சத்தியமூர்த்திபவன் எல்லைக்குள்ளேயே விடமாட்டோம் இவர்கள் இந்தக் கோரிக்கையை சத்தியமூர்த்திபவனுக்குள் வந்து மேலிடப்பார்வையாளர்களிடம் கூறவே முடியாது என்று கூறி வாழப்பாடி ஆதரவாளர்கள் விரட்டி விரட்டி அடித்ததாக தங்கபாலு ஆதரவாளர்கள் தெரிவித்தனர்

## அ.தி.மு.கவின் பெயரை பூசலுக்குள் இழுக்காதீர்கள்

-தமிழக அமைச்சர் கண்ணப்பன்

காங்கிரஸ் உட்கட்சிப் பூசலில் அ தி.மு.கவை ஏன் வம்பிற்கு இழுக்கிறீர்கள் என தமிழக அமைச்சர் கண்ணப்பன் கேட்டுள்ளார். காங்கிரஸ் கட்சியின் அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒரு உட்கட்சி சண்டை இதற்கும் அ.தி மு.கவிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை உட்கட்சிப் பூசலுக்காக எமது பெயரை இழுப்பதை காங்கிரசார் கைவிடடு விட வேண்டும் என்றும் அமைச்சர் கண்ணப்பன் குறிப்பிட்டார்.

அவர்களுக்குள் பிரச்சினை இருந்தால் அதை அவர்களாகவே தீர்த்துக்கொள்ள வேண்டிய துணிவும் தைரியமும் அவர்களுக்கு வேண்டுமே தவிர தேவையில்லாது மாற்றுக் கட்சியினரை அதற்குள் இழுக்கக் கூடாது அ,தி,மு,கவை பொறுத்தவரையில் எங்களுக்கு அரசியல் போட்டி என்று நாம் கருத வேண்டுமானால் தி,மு,கவுடன் தானே தவிர எக்காலத்திலும் காங்கிரசுடன் அல்ல பொலிசார் எந்தவித பாரபட்சமும் இன்றியே செயற்பட்டுள்ளனர் பொலிசாரின் நடவடிக்கையை அரசியல் படுத்த வேண்டியதில்லை எனவும் அமைச்சர் கண்ணப்பன் தெரிவித்தார்.

இச்சம்பவங்கள் குறித்து இருதரப்பு ஆதரவாளர்களும் இந்திரா காங்கிரஸ் பொதுச் செயலர் ஜனார்த்தன் பூஜாரியிடம் முறையிட்டுள்ளனர் தனது ஆதரவாளர்கள் தாக்கப்பட்ட சம்பவம் குறித்து அமைச்சர் தங்கபாலு சென்னையில் ஆலோசனை நடத்தினார் இதைத் தொடர்ந்து வாழப்பாடி ராமமூர்த்தியை உடனடியாக தலைவர் பொறுப்பிலிருந்து தூக்கிஎறிய வேண்டும் என அமைச்சர் தங்கபாலுவிடம் வலியுறுத்தப்பட்டது தனது கருத்தையும் தமது ஆதரவாளர்கள் கருத்தையும் பிரதமரிடம் எடுத்துக் கூறி வாழப்பாடி ராமமூர்த்தியை மாற்றியே தீருவது என்ற உறுதியுடன் தங்கபாலு டில்லி செல்ல திட்டமிட்டுள்ளார்

# அமைச்சராக புத்தலேசி மண்டேலாவால் நியமனம்

(ஜொகனர்ஸ்பேர்)

தென்னாபிரிக்காவில் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சரவையில் புதிய அங்கத்தவர்களாக ஜனாதிபதி நெல்சன் மண்டேலா தன்னிடம் இருந்து பிரிந்து வாழும் மனைவி வின்னி மண்டேலா மற்றும் முக்கிய அரசியல் எதிரியான சூலு தலைவர் பகதூர் புத்தலேசி ஆகியோரை நியமித்துள்ளார்.

அமைச்சரவையில் இடம் பெறும் அனேகமான அங்கத்தவர்கள் தேர்தலில் வெற்றியீட்டிய ஆபிரிக்க தேசிய காங்கிரஸை சேர்ந்தவர்களாவர். இதற்கு அடுத்தபடியாக முன்னாள் ஜனாதிபதி டி கிளார்க்கின்தேசிய கட்சியைச் சேர்ந்த அங்கத்தவர்களும் மூன்றாவதாக இங்காதா சுதந்திரக் கட்சியின் அங்கத்தவர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

ஜனாதிபதி நெல்சன் மண்டேலாவின் அமைச்சரவையில் சூலு தலைவர் புத்தலேசி உள்நாட்டு அலுவல்கள் அமைச்சராகவும், வின்னி மண்டேலா கலை கலாசார விஞ்ஞான தொழில் நுட்ப பிரதி அமைச்சராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

ஜனாதிபதி நெல்சன் மண்டேலாவின் அமைச்சரவையில் மொத்தம் 27 அங்கத்தவர்கள் இடம்பெற்றுள்ளனர் நிதி அமைச்சராக தேசியக் கட்சியைச் சேர்ந்த கெஸ்பெயின்ஸ் நியமிக்கப்பட்டுள்ளார். ஆபிரிக்க காங்கிரசை சேர்ந்த அல்பிடன்சோ வெளிநாட்டு அமைச்சராக பதவி ஏற்றுள்ளார்.

# அ.தி.மு.க உதவியுடன் இடம்பெற்ற நடந்த கலகம்

சத்தியமூர்த்தி பவனில் நடந்த வன்முறையை தங்கபாலு திசை திருப்புகிறார் என வாழப்பாடி கோஷ்டியினர் குற்றஞ் சாட்டியுள்ளனர்- மத்திய அமைச்சர் தங்கபாலு கூலிக்கு ஆட்களைப் பிடித்து அதிமுகவின் துணையோடு தமிழக காங்கிரஸ் அலுவலகம் உள்ளே நுழைந்து வாழப்பாடி ராமமூர்த்தி ஒழிக என கோஷமிட்டனர்.

தங்கபாலுவால் ஏற்பாடு செய்யப்பட்ட கூலிப் பட்டாளம் காங்கிரஸ் மேலிட பார்வையாளர்களிடம் அமைதியான முறையில் கருத்துத் தெரிவித்திருந்தால் இக்கலவரம் ஏற்பட வாய்ப்பில்லை- அவரால் அனுப்பப்பட்ட கூலிப்படை சத்தியமூர்த்தி பவனில் நின்றுகொண்டிருந்த கார், வான்களை அடித்து நொருக்கின- உடனே வாழப்பாடி ஆதரவாளர்கள் வாழப்பாடி வாழ்க என்ற கோஷம் இட்டபடி கார், வான்கள் சேதப்படுவதைத் தடுத்தனர். அதிமுகவின் கையாட்களாக மாறிவிட்ட தங்கபாலுவும் அவரது ஆதரவாளர்களும் திட்டமிட்டே இக்கலவரத்தை நடத்தினரென வாழப்பாடி ஆதரவாளர்கள் தெரிவித்துள்ளனர்

நல்லூர் இன்பநாலகம் மாநகராட்சி மன்றம் யாழ்ப்பாணம்


வெளிவந்து விட்டது



தளபதி கிட்டு;

ஒரு காலத்தின் பதிவு

(தொகுப்பு நூல்)

தளபதி கிட்டு அவர்கள் பற்றி கூட வாழ்ந்த தோழர்களின் உள்ளத்து உணர்வுகள்.

கட்டுரைகளாக, கவிதைகளாக உரைகளாக, அறிக்கைகளாக, இசைப்பாடல்களாக அந்த வீரனின் நினைவுகள்.

விலை: 60 ரூபா

(சி-9411)



யாழ் ஸ்ரீதரில்...

தினசரி மாலை 3, 6 மணி
சனி, ஞாயிறு காலை 10.30
மாலை 3, 6 மணி

"காற்றுவெளி"

இத்துடன் மார்ச் 94
"ஒளிவீச்சு"
காண்பிக்கப்படும்

16-5-94 முதல்

"மண்ணுக்காக"

(சி-9370)


# கிராமசேவகர் நியமனம் தகவல் பெறல் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

கிராமசேவையாளர் போட்டிப் பரீட்சையில் 1992 ஆம் ஆண்டில் சித்தியடைந்து நேர்முகப் பரீட்சையை முடித்துக் கொண்ட சகலருக்கும் நியமனம் வழங்குவதற்கான இரகசிய தகவல் சேகரித்து அறிக்கை பெறப்படும் வேலை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு பிரதேச செயலாளர்கள் ஊடாகவும் இத்தகவல்கள் பெறப்படுகின்றன. இதற்கான படிவம் வடக்கு-கிழக்கு மாகாண அமைச்சிலிருந்து பிரதேச செயலகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

பொலிஸ் அறிக்கை பெற வேண்டும் என்ற காரணத்தினால் இது நீண்டகாலம் இழுபறிப்பட்டமையும் இதனால் இராணுவ கட்டுப்பாடற்ற பிரதேசங்களில் இந்த நியமனம் சாத்தியமற்றிருந்தது என்பதும் அறிந்ததே.

பின்னர் இது மந்திரி சபைக்கு விடப்பட்டு மந்திரி சபையின் அங்கீகாரத்திற்கு அமைய அரச அதிபரின் நற்சான்றுப் பத்திரத்துடன் சம்பந்தப்பட்ட நியமனம் வழங்கத் தீர்மானிக்கப்பட்டது.

இதன் பிரகாரம் வடக்கு-கிழக்கு மாகாண அமைச்சிலிருந்து வரும் படிவம் ஒன்றினை பூர்த்தி செய்து மாகாண சபைக்கு அனுப்பியதன் பின்னர் நியமனம் வழங்கப்படும் என செய்தி வந்தது குறிப்பிடத்தக்கது. இதையடுத்து தற்போது வட-கிழக்கு அமைச்சிலிருந்து நியமனம் பெறத் தகுதியுடைய ஒவ்வொருவரின் சுய விபரங்கள், இரகசியமாகச் சேகரிக்கும் வேலைகள் சம்பந்தப்பட்ட பகுதிகளில் உள்ள பிரதேச செயலகங்களுக்கு ஊடாக படிவங்கள் அனுப்பி வைக்கப்பட்டு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

விரைவில் கிராம சேவையாளர் வெற்றிடங்கள் இந்த நியமனங்களால் நிரப்பப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

# பதிவு செய்யவந்த ஆசிரியர் ஏமாற்றத்துடன் திரும்பினர்

(யாழ்ப்பாணம்)

பட்டதாரிப் பயிலுநர்களாக ஒருவருடம் சேவையை முடித்த அல்லது சேவையில் இருந்து கொண்டு நிரந்தர பட்டதாரி நியமனத்திற்கு விண்ணப்பித்தும் இதுவரை நியமனம் கிடைக்காத பட்டதாரிகளை பதிவு செய்யும் வண்ணம் இலங்கைத் தமிழ் ஆசிரியர் சங்கம் விடுத்த வேண்டுகோளை தொடர்ந்து பல ஆசிரியர்கள் யாழ் குடாநாட்டின் பலபகுதிகளில் இருந்தும் நேற்று முன்தினம் ஆசிரியர் சங்க அலுவலகத்திற்கு முன்னால் கூடி நின்றனர்

ஆனால் இலங்கைத் தமிழ் ஆசிரிய சங்கத்தைச் சேர்ந்த உத்தியோகத்தர் எவரும் அலுவலகத்தில் இல்லாமையால் ஏமாற்றத்துடன் திரும்பிச் சென்றனர்

## கிரிக்கட் போட்டி

(நல்லூரர்)

ஈ-எஸ் பேரம்பலம் சக நிறுவனத்தாரின் ஆதரவில் ஜொலிஸ்ராஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் 9-வது கிரிக்கட் போட்டி இன்று பி.ப ஒருமணிக்கு யாழ் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது

இக் கிரிக்கட் போட்டியின்

## கரபந்தாட்ட போட்டி

யாழ்ப்பாணம் - வலயம்-1 பாடசாலைகள் கரபந்து இறுதிச் சுற்றுப் போட்டி இன்று பிற்பகல் 2 மணிக்கு சென் ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. இ. சிவானந்தன் தலைமையில் நடைபெறும் பிரதம விருந்தினராக கல்விப் பணிப்பாளர் செல்வி திலகவதி பெரியதம்பி கலந்து கொள்கிறார். சிறப்பு விருந்தினராகத் தமிழீழ கல்விக் கழகம் திரு. அருள் கலந்து கொள்வார்.

17 வயதுப் பிரிவில் 3ஆம் இடத்திற்கான போட்டியில்

# உபாலி கைதான முறை குறித்து பொலிசார் மத்தியில் சர்ச்சை

## பாதுகாப்புக்காக கைது செய்யப்பட்டாரா?

(கொழும்பு)

சொத்தி உபாலியின் கைது தொடர்பாக பொலிஸ்திணைக்களத்தின் அதிகாரிகள் மட்டத்தில் கருத்து முரண்பாடுகள் ஏற்பட்டுள்ளன.

கட்டுகஸ்தோட்ட பொலிசார் இவரை கைது செய்ய இவரது வீட்டை சோதனையிட்ட போது இவரின் சகோதரிகள் மூவர்மட்டுமே கைது செய்யப்பட்டதாகவும், ஆனால் எவ்வாறு சொத்தி உபாலி அதே பகுதியில் பம்பலப்பிட்டி பொலிஸ் நிலையத்தில் இருந்து வந்த பொலிஸ் அணியினால் அவரைக் கைது செய்யக் கூடியதாக இருந்தது எனவும் வினா எழுப்புகின்றார்கள்.

சொத்தி உபாலி வேறு பொலிஸ் பிரிவுகளை சேர்ந்தவர்களினால் கைது செய்யப்பட்டால் நிலைமை சிக்கலடையலாம் என்றும் எனவே இதனை தடுக்கும் நோக்கில் பிரபல அமைச்சர் தனது செல்வாக்குள்ள பொலிசாரை மேற்படி இடத்திற்கு அனுப்பி அவரை பாதுகாப்புக்காக கைது செய்திருக்கலாம் எனவும் பரவலாக நம்பப்படுகிறது.

இதேவேளை கட்டுகஸ்தோட்ட வீட்டில் கைது செய்யப்பட்ட சொத்தி உபாலியின் சகோதரிகள் மூவரும் நேற்று கண்டி நீதவான் முன்னிலையில் நிறுத்தப்பட்டு விடுதலை செய்யப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

# மடிப்புக்கலையாஉடையுடன் தடுப்புக் காவலில் உபாலி

## ராஜபோக வாழ்வு என்கிறார் செய்தியாளர்

பம்பலப்பிட்டி பொலிஸ் தடுப்புக் காவலில் உள்ள பாதாள உலகின் மன்னன் சொத்தி உபாலி மேற்படி பொலிஸ் நிலையத்தில் ராஜ போக வாழ்க்கையே நடத்துவதாக 'லங்கா தீப' பத்திரிகை செய்தியாளர் தெரிவித்துள்ளார்.

தங்கமுலாம் பூசப்பட்ட கைக்கடிகாரமும் மடிப்புக் கலையாத தூய வெள்ளை நிற முழுக்கை சேட்டும் அணிந்து மது அருந்திய நிலையில் சிகரெட் புகைத்த வண்ணம் சொத்தி உபாலி காணப்பட்டார் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்

# உபாலி மீதான விசாரணை வெறும் கண்துடைப்பு

## சு. க. உறுப்பினர் பெர்னாண்டோபிள்ளை

(கொழும்பு)

நீர்கொழும்பு நீதிமன்ற வளவில் சென்ற மூன்றாம் திகதி நடைபெற்ற துப்பாக்கிப் பிரயோகம் தொடர்பாக நீர்கொழும்பு பொலிசைச் சேர்ந்த விசேட அதிகாரிகள் இருவர் சொத்தி உபாலியை விசாரணை செய்ததாகவும் அவர்கள் அங்கு நலம் விசாரிப்பதைப் போன்று நடந்து கொண்டதாகவும் கம்பஹா மாவட்ட சுதந்திரக் கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர் பெர்னாண்டோபிள்ளை தெரிவித்துள்ளார்

சொத்தி உபாலி தடுப்பு முகாமின் உள்ளே இருந்ததாகவும் நீர்கொழும்பு பொலிசார் வெளியே நின்று இவருடன் பேசிவிட்டு திரும்பியதாகவும் இது ஒரு கண்துடைப்பு நாடகம் என்றும் மக்களை ஏமாற்றும் அரசாங்கத்தின் திட்டம் இது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை சொத்தி உபாலி மீதான விசாரணை அதிக காலம் நீடிக்காது எனவும் விரைவில் இது கைவிடப்படலாம் எனவும் அவதானிகள் கூறுகின்றனர்.

## றுகுணு இன்று வரும்

[யாழ்ப்பாணம்]

''றுகுணு'' என்ற கப்பல் இன்று காலை பருத்தித்துறை துறைமுகத்தை வந்தடையும் என்று எதிர்பார்க்கப் படுகிறது. [க]

## வைகாசி கொடுப்பனவு

விவசாயிகள் ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் ஓய்வூதியம் பெறும் யாழ் மாவட்ட விவசாயிகளுக்கான வைகாசிமாத கொடுப்பனவு எதிர்வரும் செவ்வாய்க்கிழமை காலை பத்து மணியளவில் கமத்தொழில் காப்புறுதிச்சபை மண்டபத்தில் வழங்கப்படவுள்ளது.

# ஜேர்மனியில் வெளிநாட்டவர் மீது நாஜிகள் கோஷ்டி தாக்குதல்

## கறுப்பின மக்கள் பலர் காயம்

(சி-9370)

சாவகச்சேரி

தெய்வேந்திரா வெண்திரையில்

சிவாஜி, பத்மினி நடித்த

"தில்லானா மோகனாம்பாள்"

நெல்லியடி

மகாத்மா வெண்திரையில்

எம். ஜி. ஆர். பானுமதி நடித்த

"நாடோடி மன்னன்"

தினசரி 6. 30 காட்சிகளாயும்,
சனி, ஞாயிறு தினங்களில்
10. 30, 2. 30, 6. 30 காட்சிகளாயும்
காண்பிக்கப்படுகின்றது. (கலர்)

(சி-9386)

கணக்காளர் தேவை

கிளிநொச்சியில் எமது பொது நிர்வாக தொடர் பகத்தில் கணக்கியல் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு கணக்காளர்கள் தேவைப்படுகின்றார்கள்.

- தகைமைகளுடனும் முன் அனுபவங்களுடனும் விண்ணப்பிக்கவும்.
- தகைமைக்கு ஏற்ப ஊதியம் வழங்கப்படும்
- போக்குவரத்து, தங்குமிட வசதிகள் செய்து தரப்படும்

விள, இல, 332
மே/பா ஈழநாதம்
மகேந்திரா வீதி,
யாழ்ப்பாணம்.

(8273)

...ரி மைதானத்தில் நடை பெறவுள்ளது

இக் கிரிக்கட் போட்டியின் முதலாவது ஆட்டம் ஸ்ரான்லி விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழகத்திற்கும் இடையில் நடைபெறவுள்ளது.

## வீரவணக்க கூட்டம்

வலிகாமம் கோட்டத்தில் உடுவில் - தெல்லிப்பழை வட்டத்தில் 5ம் மாதங்களில் வீரச்சாவடைந்த மாவீரர்களுக்கான வீரவணக்கக் கூட்டம் இன்று இரவு 7. 30 மணியளவில் மல்வம் ஞானப்பிரகாசர் கலை அரங்கில் நடைபெறவுள்ளது. கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும்.

## கராத்தே போட்டி

யாழ். மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழுவினால் நடாத்தப்படும் கராத்தே போட்டியின் இறுதிப் போட்டிகளும், பரிசளிப்பு நிகழ்வும் நாளை ஞாயிற்றுக்கிழமை பி. ப. 1. 30 மணிக்கு யாழ் மத்திய கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. யாழ் மாவட்டத்திலுள்ள சகல பிரபல கராத்தே பயிற்றுநர்களின் மாணவர்களும் இப்போட்டியில் பங்கு ஏற்கின்றனர் அத்துடன் சகல பிரபல கராத்தே பயிற்றுநர்களினதும் கண்காட்சி நிகழ்வும் நடைபெறவுள்ளது.

17 வயதுப் பிரிவில் 3ஆம் இடத்திற்கான போட்டியில் சென்ஜோன்ஸ் கல்லூரியை எதிர்த்து சென் ஜோசப் மகாவித்தியாலயமும், முதலாம் இடத்திற்கு மத்திய கல்லூரியை எதிர்த்து கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயமும் விளையாடும்,

19 வயதுப் பிரிவில் 3ஆம் இடத்திற்கு கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயத்தை எதிர்த்து சென் ஜேன்ஸ் கல்லூரியும், முதலாம் இடத்திற்கு மத்திய கல்லூரியை எதிர்த்து மட்டுவில சந்திரபுர ஸ்கந்தவரோதயாவும் விளையாடும்.

### சமாதானத்தின்

தென்பகுதியில் இருந்து கொண்டு யுத்தம் பற்றி பேசுபவர்கள் போர்முனைக்கு செல்வதில்லை, ஐந்து நட்சத்திர ஹோட்டல்களில் அமர்ந்து கொண்டு எல்லாளன்-கைமுனு யுத்தம் பற்றி பேசிக்கொண்டிருந்தால் சமாதானம் வந்துவிடப் போவது இல்லை. யுத்தத்தை சமாதானத்தின் மூலம் தீர்த்து வைக்கலாம் என்பது புதிய கோட்பாடு. தென் ஆபிரிக்காவில் 27 ஆண்டு சிறையிலிருந்த நெல்சன் மண்டேலா ஜனாதிபதியாகி இருக்கிறார். கீரியும் பாம்பும் போல இருந்த ராபினும் அரபாத்தும் ஒரேமேடையில் அமெரிக்காவின் கிளிண்டன் நடுவே இருக்க கை குலுக்குகின்றனர், சமரசத்திற்கு வந்துள்ளனர், நம்மிடையேயுள்ள பிரச்சினைகளையும் நாம் பேசித் தீர்க்க வேண்டும் என்றும் தெரிவித்தார்.

## தவறிவிட்டது

இரத்தினம் விக்கினேஸ்வரராசா என்பவருடைய அடையாள அட்டையும், தினக்குறிப்பும் (டயறி) அதனுள் முக்கிய குறிப்பும் செம்மணிப் பிள்ளையார் கோவில் அண்மையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கவும்.

(8274)

## கறுப்பின மக்கள் பலர் காயம்

கிழக்கு ஜேர்மனியில் மகஸ்பேர்க் நகர வர்த்தக மையப் பகுதியில் சுமார் நாற்பதுபேர் அடங்கிய புதிய நாஜிகள் கோஷ்டி ஒன்று ஐந்து கறுப்பின மக்கள்மீது தாக்குதல் நடத்தியது இதில் இரண்டு ஆபிரிக்கர் கத்திவெட்டுக் காயங்களுக்கு இலக்காகினர். வெளிநாட்டவர் பலர் காயமடைந்தனர்.

நேற்று இரவு துருக்கியர் தலைமையிலான வெளிநாட்டவரும் இடதுசாரிகளும் அடிப்படை வாதிகளுடன் மோதியதில் ஆறு பேர் காயப்பட்டனர். சுமார் நூறு ஜேர்மன் பொலிசார் பல மணித்தியாலங்கள் முயற்சித்து நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தனர்.

### சுவரொட்டி

தங்களை மேற்கொண்டு வந்தேன். அதற்கு முன்னர் என்னைப் பொலிசார் கைது செய்து விட்டனர்.

''என்னைக் கைது செய்ய வந்த பொலிசார் மீது தாக்குதல் நடத்தவோ, அல்லது தப்பியோடவோ கூட நான் எத்தனிக்கவில்லை. நான் நிரபராதி என்பதனாலேயே அவ்வாறு நடந்து கொண்டேன்'' என்றார்.

### விசேட

கலந்துரையாடல் ஒன்று நாளை பி.ப. 3.00 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இதில் அனைவரும் தவறாது கலந்துகொள்ளுமாறு யாழ் மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் கேட்டுக் கொள்கின்றார்.

### வயோதிபரும்

நடராசா (வயது 60) என்பவரே நேற்று மரணமடைந்தார்

கடந்த மாதம் 28ஆம்திகதி மேற்படி தியேட்டர் பிளாற் இடிந்து வீழ்ந்ததில் நித்திரையில் இருந்த சிறுவன் ஒருவர் இறந்ததும் அச்சிறுவனின் பாட்டியாரான இந்த வயோதிபப் பெண் படுகாயமடைந்ததும் தெரிந்ததே

### புலிகள்

தேர்ந்தெடுக்கப்பட்ட எந்த மாநில அரசையும் கவிழ்க்க மத்திய அரசு சதி செய்யவில்லை எனவும் மேலும் தெரிவித்தார்,

## கட்டைக்கை ரவியும் பொலிசாரால் கைது

பாதாள உலகின் முக்கிய நபர் என கருதப்படும் வேறும் ஒருவர் புறக்கோட்டை பொலிசாரினால் நேற்று முன் தினம் மாலை கைது செய்யப்பட்டுள்ளார் என அறிவிக்கப்படுகிறது

ரவீந்திரன் அல்லது கட்டைக்கை ரவி என அழைக்கப்படும் மேற்படி நபர் பல கொலை, கொள்ளை தொடர்பாக தேடப்பட்டு வந்தார் என்றும் இவரை ஜிந்துப்பிட்டி வீடொன்றில் வைத்து பொலிசார் கைது செய்துள்ளனர் எனவும் கூறப்படுகிறது.

### அத்தியாவசிய

களின் விபர அறிக்கை தொடர்பாகவும் இவ்விடயம் குறித்து மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் குறித்தும் பேசப்பட்டதாகவும் கொழும்பில் இருந்து எமக்கு கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ஈ)

### வறுமை

க்கு சென்றாலென்ன செல்லாவிட்டாலென்ன குறிப்பிட்ட வயதுக்கு உட்பட்ட சகலருக்கும் இந்த மேலதிக உணவு முத்திரைக்கான கொடுப்பனவாக 50 ரூபா வழங்கப்படவுள்ளது. இது தொடர்பான அறிவுறுத்தல் யாழ். மாவட்டத்திலுள்ள சகல பிரதேச செயலகங்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது அத்துடன் 9 வது கட்ட வறுமை நிவாரண உணவு முத்திரைகளும் பிரதேச செயலகங்களினால் வழங்கப்பட்டுவருகின்றது. (சி), (தி)

## திறப்பு விழா

தமிழர் புனர்வாழ்வு கழகத்தின் பல்துறைப் பயிற்சியகத் திறப்பு விழா நாளை காலை பத்து மணியளவில் அரசடி வீதி கந்தர் மடத்தில் நடைபெறவுள்ளது. இன்றைய போர்க்கால சூழ்நிலையில் சுய தொழில் முயற்சியினை ஊக்குவிக்கும் முகமாக பல்துறை சம்பந்த தொழில் பயிற்சிகளையும் கல்வி சார் பயிற்சிகளையும் இந்த நிலையம் வழங்கவிருப்பது குறிப்பிடத்தக்கது.

## பலாக்காய் வீழ்ந்து படுகாயம்

(யாழ்ப்பாணம்)

வீதியால் வந்துகொண்டிருந்தவர் மீது பலாக்காய் வீழ்ந்ததில் அவர் படுகாயமடைந்து ஆபத்தான நிலையில் யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இது குறித்து தெரியவருவதாவது; நேற்று முன்தினம் நீர்வேலியைச் சேர்ந்த நாகமுத்து நல்லலிங்கம் (வயது55) என்பவர் ஒழுங்கையால் நடந்து வந்துகொண்டிருந்த போது பலா மரத்திலிருந்து வெட்டிய பலாக்காய் ஒன்று இவரது முதுகின் மேல் வந்து விழுந்ததாம்.

இதனால் படுகாயமுற்ற இவர் தற்போது யாழ் போதனாவைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

திங்கள் முதல்... மண்ணுக்காக

(இ)

இப் பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 81 ஆம் இலக்கத்திலுள்ள ''ஈழநாதம்'' பணிமனையில் 1994 ஆம் ஆண்டு மே மாதம் 14ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.